# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

செப்டம்பர் 2006 ஜீவியம் 12 மலர் 5

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அஜெண்டா | 2 |
| இம்மாதச் செய்தி | 4 |
| லைப் டிவைன் | 5 |
| எங்கள் குடும்பம் II | 15 |
| அன்பர் கடிதம் | 40 |
| தரிசனம் | 41 |
| சாவித்ரி | 56 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 58 |
| லைப் டிவைன் - கருத்து | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

### ஜீவியத்தின் ஓசை

✡ **எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்கியவன் எல்லோரையும் விட வசதியாக இருப்பான்.**

✡ **ஆண்டவனை மட்டும் நம்புவது நம்பிக்கை.**

✡ **தவற்றைச் சுட்டிக் காட்டுவது தவறு.**

**Personally and physically I kept a contact with everyone.**
**ஒவ்வொருவருடனும் நான் உடலால் நேரடியான தொடர்பு வைத்திருந்தேன்.**

— ஸ்ரீ அன்னை

ஆஸ்த்மாவால் வேதனைபட்ட சாதகி இரவில் வலி தாங்க முடியாமல் எழுந்து உட்கார்ந்தபொழுது தம் கால் சில்லிடுவதை அறிந்து காலை நோக்கினால் அது அன்னையின் திருப்பாதமாகத் தெரிந்தது. வலி போய்விட்டது. அன்னையிடம் அதைக் கூறியபொழுது தாம் அந்த இரவு அச்சாதகியுடன் இருந்ததாகக் கூறினார்.

- ✡ **அன்னையின் உடல் பிரபஞ்சம் முழுவதும் ஒரு சமயம் பரவியது.**
- ✡ **உலகில் உள்ளது ஒரே உடல். நாம் அனைவரும் அதன் பகுதிகளாகும்.**
- ✡ **பழம், மலர் மறைவாக இருந்தாலும் மணம் காற்றில் வரும். அது சூட்சுமமாக நம்மை வந்தடைகிறது. கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் காற்றில் மிதந்து வருகிறது.**
- ✡ **சூட்சுமம் மூவகை subtle, occult, causal. நாம் மூன்றையும் சூட்சுமம் என்கிறோம். மணம் ஒரு வகை. காற்றில் வரும் 'ஆவி' - இறந்தவர் ஆவி - அடுத்த வகை. அதிர்ஷ்டம், அருள் நம்மை நோக்கி வருவது மூன்றாம் வகை.**
- ✡ **அன்னை நம்முடன் வாழ்ந்தது பூதவுடல், ஜடமாக நாம் அவரைக் காண முடிந்தது.**
- ✡ **பிரார்த்தனைக்குப் பதில் தரும் அன்னை சூட்சுமமானவர்.**
- ✡ **ஆகர்ஷண சக்தி, புவிஈர்ப்பு சக்தி என்பது கண்ணுக்குத் தெரியாமல் உள்ளது. கல்லைக் கையில் எடுத்து விரலை அகற்றினால் தரையில் விழுகிறது. அச்சக்தி செயல்படுகிறது.**



- ✡ **தியானத்தில் அன்னையின் கண், பாதம், விரல்கள் தெரிவது வேறொரு வகை சூட்சுமம்.**
- ✡ **அரை அடி தூரத்தில் வந்த லாரி திடீரென பிரேக் போட்டு நிறுத்தியபொழுது சூட்சுமப் பார்வையுள்ள பக்தர் ஒரு கல் சுவர் லாரியைத் தடுத்ததைக் கண்டார். கல்சுவராக அன்னை சூட்சுமத்தில் உறைகிறார். சுவர் அன்னையின் உடலின் பகுதி. நாம் காண்பதில்லை.**
- ✡ **வடஇந்தியாவில் டெல்லியில் கிரெடிட் கார்டைக் கொடுத்தால் கடையில் பொருள் வாங்க முடிகிறது. நம் பணம் அங்கே சூட்சுமமாக உள்ளதுபோல் அன்னையின் மனமும், உணர்வும், உடலும் எங்கும் உள்ளன. தேவைப்பட்டபொழுது, தேவைப்பட்ட அளவில் செயல்படும்.**
- ✡ **அன்னை படம் வரையும் கலைஞர் உணர்ச்சிவசப்பட்டால் அவர் விரல்கள் அன்னை விரல்களாக மாறுவதைக் காண்பார். மாறிய இடம் ஒளிமயமாகும். இன்பமான இதமான உணர்வு சில்லென எழும்.**
- ✡ **தென்னந்தோப்பில் தேங்காய் தலையை நோக்கி விழும்பொழுது, காற்று வேகமாக அடித்து தேங்காய் விலகும்பொழுது, காற்றைச் சூட்சுமப் பார்வை அன்னையின் உடலாக, கையாகக் காணும். பக்தனுக்குப் பாதுகாப்புத் தரும் கரம் அது.**
- ✡ **அன்னையின் ஆத்மா, மனம், உயிர், உடல் இல்லாத இடமில்லை. காண அதற்குரிய சூட்சுமத்திறன் தேவை.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பைத்தியம், குழப்பம், துரோகம், வேதனை, கொடுமை ஆகியவை மனம், உணர்வு, உடல் திருவுருமாற்றமடைய தவிர்க்க முடியாத பாதைகள்.

***மாறும் வழிகள் மனம் ஏற்கக்கூடியதல்ல.***

## இம்மாதச் செய்தி

**காலத்தையும், காலத்தைக் கடந்ததையும்**

**உலகம் அறியும்.**

**காலத்துள் காலத்தைக் கடந்தது**

**செயல்படுவது ஸ்ரீ அரவிந்தம்.**

**அது துறவறத்தின் தூய்மையுள்ள**

**இல்லறம்.**





**லைப் டிவைன்**

கர்மயோகி

## XIV. The Supermind — As Creator

Sri Aurobindo cites the example of the sun moving around the earth in talking about the inability of the senses to do the duty of the Mind. The idea that it is the earth that goes round the sun is an idea of the thinking mind, not the ocular sense that sees. **The process of the Mind that arrived at that idea is thinking, maybe mathematical thinking**. We see the sun. It is the eye that sees. The eye does not have the power of thinking. It is one of the senses. Our life is a vital life mostly. We see, hear, smell, touch, taste. These sensations give our life knowledge. On important issues, we sit down, withdraw from the senses and think and decide which job to accept, what course to choose, whether we can accept this alliance. These are all mental processes. Brain is the seat of Mind. Its higher version is subtle and its centre is between the brows. The world is created by the Supermind and not the Mind, says Sri Aurobindo. In this chapter he describes the Supermind and explains how the creation was made. **It is an explanation offered to the Supermind in us as it is about the Supermind**. As yet there is no centre in Man for that plane — the Supermind. No wonder we don't understand. Mother says no one has understood His explanations about the Supermind. So, is there any use of our reading the book at all?

Even in the beginning of the chapter He says that this difficulty exists, but it is not as if we have no real connection with this exalted plane. They are indirect, fragmentary. Mind understands by thinking. Above that lie insight and intuition. We often see these faculties flash in us. Without trying to think, i.e. disinheriting the active Mind, if we shift our emphasis to insight and intuition, His explanations will reach us. In the last para He says religions believe God is omniscient, omnipotent, omnipresent. It is not a knowledge they got by the thinking of Mind. It is a perception they had by insight and intuition. There are certain facts of life where a similar phenomenon occurs. They can be of some guidance.

A political party is full of volunteers, workers, experienced leaders. But there is one who is a mass leader who alone attracts the crowd, for whose sake the people vote. **The mass leader creates the party, the others run it or manage it**. In a family there are a few members, sometimes several members, but one or two earn. All the income comes from the earning members. Others run the family. The others will never earn. They are not interchangeable qualities. The same difference exists between the self-employed entrepreneur and the salaried employee. The Supermind is like the earning member. Sri Aurobindo illustrates this principle through parts and the whole and goes on to say that even the sum of the parts will not be the whole, as the parts of a machine collected in a box will not be a machine. That faculty is not yet in us. We have to create it. Till then we have to be satisfied by an intellectual statement that does not shut out the higher faculties. **When it is created it will lodge behind the heart, not in the heart**. Hence the injunction to concentrate behind the heart.

Now we see before us objects, walls, furniture, shops, moving men, trees, and birds all apparently not connected with each other. We get those impressions through our senses. When we shift to thinking in our Mind, still we do not see any connection between them. There is a lamp post; a man is passing nearby. Our Mind is unable to think of any relation between the man and the post. We



know our left leg and right hand are parts of the same body. They are related. Body is a whole of which the leg and hand are parts. We do not see such a relationship between the moving man and the stationary post. **In fact they really are related**. Suppose we succeed in moving to the centre behind the heart, then we will see the man and the post are related as the leg and the hand are related. As the vision ripens, it becomes perfect. Then the Man ceases to be a man, he acquires a supramental form. Both are, to the supramental, the same form. In the Alipore Jail, Sri Aurobindo saw the jailors, the convicts, the iron bars, the branches of the tree were all one. He saw them as Narayana. He called it Narayana Darsan. If a devotee should have the same vision, he will see the objects before him as Sri Aurobindo. It will be Sri Aurobindo Darsan. For the lack of a better word Sri Aurobindo called His vision Narayana Darsan. As Narayana is an overmental god and this was a Supramental vision, they will not go together. In the sense Narayana was born from the Supramental plane, it will be right. In that vision there will be no evil, as in the vision of Arjuna. It was of duality. Therefore Arjuna saw good as well as evil. In the Supramental vision there is only good.

The ideas in this chapter are:

1. Supermind can be indirectly known through its several relations with life.
2. Vedic clues of Supermind.
3. The Process of the One becoming the Many.
4. Why Sachchidananda could not have created this world of ours.
5. What prevents the Mind from being the creator.
6. Mind understands its own analysis, not the thing it talks about.
7. The three poises of consciousness.
8. What is Supermind? Its six powers.

9. Real-Idea, how it acts.
10. Thought separates itself from the object and finally we too detach from the object.
11. The Real-Idea is triune, not three in one.
12. The difference between the Supermind and Mind.
13. How the Supermind makes itself implicit and explicit.
14. The insight of the tradition and its error.

In the previous chapter He explains Maya is the key to the world enigma. That key, He says, is to be turned in the lock of the universe which is Sachchidananda. Maya creates an active truth of an ordered being out of a static truth of an essential being. In other words:

- ❀ from all is in all.
- ❀ Maya creates all in each and each in all.

In the chapter on Brahma, Purusha, Ishwara, Maya is described as:

- ✡ conceptively creative, while Prakriti is
- ✡ dynamically executive, and Shakti is
- ✡ **conceptively creative and dynamically executive.**

Also in the chapter on Maya, He goes on to explain that Mind has no power to create this world and a superior power is needed. And that superior power is Supermind. In this chapter, No.14, HE explains how it dynamically executes:

- ✰ By conceptively creating He ends saying "All Nature is Seer will that creates force and form".
- ✰ It's dynamic execution is how the Supermind draws the Many out of the One without losing the One in the process.



He also says the Infinite does not create it only manifests what is already there. Brahman becomes substance in the universe by a self-extension. Mind and Life create Matter out of it (p.239). Here He says Supermind is the vast self-extension of the Brahman. It can contain Brahman in it and it can develop. Supermind, He says, has the powers of development, evolution and making explicit. In another part of the Supermind it has the powers of envelopment, involution and making implicit. One is the comprehending Supermind and the other is the apprehending Supermind. It is useful to note the first is in Timelessness and the second is in Time. Earlier, it is said it is Supermind that created Existence, Consciousness and Bliss out of the One that is Sachchidananda. **The central emphasis falls on the aspect that it is a process of differentiation and not division.** Supermind is also explained as the objective state of Sachchidananda — It is the nature of Sachchidananda. The same definition is used elsewhere for the difference in being and consciousness. All of them — objectifying, nature, consciousness, are said to be extensions of the Being. **When the Rishis said, 'We know the One, we know the Many, but do not know how the One became the Many'**, Sri Aurobindo said it is by the decision of the One to objectify itself that the One became the Many. Further, if the objectification is extension, it is outer extension. Then the inner extension is the subjective state. Here the subjective state is the comprehending Supermind in Timelessness and the objective state is apprehending Supermind in Time.

- ✰ So creation is a process of objectifying.
- ✰ Objectifying is self-chosen.

On page 237, mind is explained as an extension of knowledge of the Being. **On an analogy we can say Supermind is the extension of creative knowledge of Brahman**.

It is better to think of all the processes of creation and examine whether they are in succession or simultaneous. What

faculties are incident? and what is meant by a faculty in this context. Answering the last first,

- ✡ A faculty is the capacity to move what is not in motion. Furthermore, it has the capacity – or organisation – to move it as it intends.
- ✡ Self-conception, Self-limitation, Self-absorption are the faculties listed.
- ✡ It is difficult to say which are simultaneous and which are successive. Still we know the subjective precedes the objective, Timeless Time, Being Consciousness.
- ✡ Spirit and Truth are from the Being. Time and Space are from the Spirit. Mind is from the Supermind.

By process of creation we mean the following:

Brahman – Sat*-Chit-Ananda.

Spirit – Truth (subjective and objective states of Sat)

Time and Space similarly issue out of Spirit.

Self-Conscious Being splits into Atma, Purusha, Ishwara and their powers Maya, Prakriti and Shakti.

Knowledge turns into Ignorance passing through 7 stages.

The lower triplicity of Mind, Life and Matter are there.

At the Supramental level it is Real-Idea that creates.

1. all in each; and 2. each in all.

Beyond this the Transcendent, cosmos, universe and Individual are another gradation.

Consciousness by self-absorption becomes Superconscient and Inconscient.

---

* Along with Sat, Asat comes out, along with Chit and Ananda inconscient and insensibility also emerge.



One more definition is worth considering — Maya is the consciousness of Brahman. Supermind is the knowledge extension of Brahman.

The explanation of the 14 ideas mentioned earlier draws upon these descriptions in the book at several places. Better to keep it in Mind. Let us take the first idea.

1) Supermind can be indirectly known.

One assumption is based on *all is in each and each is in all*. One who looks for the ultimate knowledge can find it in any place because somewhere it is there in some form.

Supermind is revealed as genius, omniscience, omnipotence, omnipresence, as great acts of courage. **Wherever an impossible unexpected thing becomes possible, one can look for the touch of Supermind, if he is looking for it**.

Even when you know it or are that, it is possible for one to be unconscious. Unconsciousness is all-pervasive, even through consciousness.

Though one has access to these regions, the door shuts at once. Work is needed to keep the door permanently open.

The principle here is even in lower planes the higher plane is accessible for those who take the greatest effort. It is available as a flash. To make it permanent, the entire atmosphere must be elevated to that higher level.

- ✡ **A one-time success at any level is always possible for a while**.
- ✡ **Einstein says one must be able to explain even to a child if you understand it well**.
- ✡ Things are not difficult or easy. It depends on who listens and who explains. Men are all spiritually equal. So also on

the surface life any man has all the knowledge he needs that includes the capacity to know the highest knowledge. The medium is unsuitable. There is no idea in *The Life Divine* that cannot be communicated to any illiterate person if only you know his idiom — the factor of conversion.

2) Vedic clues

The Vedas have not spoken anything explicitly. At best they were cryptic. It was their style for whatever reason. Their clues:

- ✰ Vast all-comprehensiveness, luminous truth, harmony of being.
- ✰ Truth of law and act and knowledge expressive of that harmonious truth of being.
- ✰ The Gods in their highest secret entity are powers of Supermind.
- ✰ Light is here one with Force.

Some subordinate but important details:

- ❀ truth vision, truth audition.
- ❀ revelation, inspiration.

These large terms make one thing clear that it is not our mind. It must be between our mind and Sachchidananda.

3) One becoming the Many.

a. The one is above. The Many is below. **The Many seeks in its mutable state something firm and immutable**.

b. The Many are drawn out of the One because it is there in potential. It draws out the Many without losing the One.

c. It posits Something beyond the One and the Many. It is the Absolute. Our knowledge of the Absolute will justify God and the world.



The hierarchy in the army, the functioning of a company are *EXACTLY* on these lines of producing the Many out of the One. In the army, no soldier can fire a single bullet without the order of the officer above. All decisions are taken above and passed on below. No order can be disobeyed. We see the soldier firing, but we do not see the soldier fires on the orders that finally originate from above. In a company we can liken the Board to the One Sachchidananda, the general manager to the Supermind and the worker to the Many. It may appear that the worker does what he wants or the manager or supervisor gives the orders.

The worker below and the Board above indicate that there should be a *FOUNDER* who is not bound by the Board or the labour.

Points No.4 and 5 are simple.

6) Mind understands its own analysis.

A man entering an organisation sometimes is able to conceive that it is there solely for his benefit. He is selfish. Should this attitude be contagious after a few generations, the ideal for which the organisation was originally created will be totally forgotten. **Anyone trying to remind the members of the original ideal will be laughed at. They may not now remember it.** Government departments are like that. It is natural that a member there conceives of the organisation *ONLY* in terms of his own benefit. Mind is like that.

Non-earning members of the family who have long forgotten that someone is earning for them and taking it for granted will insist on their own requirements and will not be able to understand what is happening in the family. Paucity of funds and scarcity of material arise because the selfish member has forgotten that he is part of an organisation and he is there to work for it. He has assumed that the organisation is there **only to meet all his needs**.

- ❀ Such a man understands only his needs.

❀ Mind, like this, understands only its own analysis.

Point No.7 is a mere statement of fact.

8) ✡ Development, evolution, making explicit in the descent.

Envelopment, involution, making implicit in the ascent are the six powers of the Supermind.

✡ Differentiation without division is a basic concept.

The father, the officer, the voter are the three functions of a citizen. He is one who has three aspects. There are no persons. To see three aspects as three persons is an error mind commits.

✡ Human personality creates in one the above six powers.

Point No.9 is partially a repetition of the above ideas.

As the idea is from consciousness, so the Real-Idea is from the Being. Consciousness in its downward movement creates idea (knowledge) and will. As it is moving downward, they are separate. Being is the prior stage to consciousness. Therefore, its idea is Real-Idea. There will and knowledge are united. The officer commanding issues orders below to fire. A junior officer shouts out the order. The soldier fires. When the commanding officer wants to fire, he needs no orders. He fires.

10) Thought separates itself from the object

A photo separates the form from the person. The photographer finds the photo more important. As a result he values the photo and he himself is now separated from the person whose photo he now has.

11) A statement of a simple description.

12), 13) and 14) are obvious.

❀❀❀



# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**கணவர்** - அது வந்தபின் அது பவர் பிராஜக்ட்டில் வர வேண்டும்;

**பார்ட்னர்** - Power Plantஇல் வந்ததால்தான் நமக்குப் பக்குவம் ஏற்பட்டு உள்ளது. நமக்கு ஆதாய மனப்பான்மை:

✡ கணவர் பேசுவதும், அதற்குப் பார்ட்னர் பதில் சொல்வதும் சரி. அதைக் கடந்தது ஒன்றுண்டு. பவர் பிராஜக்ட்டில் இறைவன் வரும் தருணம் தெரியாவிட்டால், கணவர் போன்றவர்க்கு அது தெரியாது. சாதாரண மனிதனுக்குத் தெரிந்த பாஷை அது. சுதந்திரம் வந்தது சுபிட்சமாக மாறாமல் எளிய மனிதன் சுதந்திரத்தைக் கண்டுகொள்ளமாட்டான்.

✡ இறைவன் வரும் தருணம் மௌனமாக வந்தால் சூழல் கனக்கும், ஜோதியாக வந்தால் சூழல் பிரகாசமாக இருக்கும், அமைதியாக வந்தால் சூழல் இனிக்கும், ஆனந்தமாக வந்தால் உடல் புல்லரிக்கும். சூழலில் இறைவன் திருவுருவம் தெரியும். அவனது அசரீரி கேட்கும். மழையாகப் பொழியும். இதை இறைவன் வரும் தருணமாக அறிந்தவர்கள் உண்டு. அறியாதவருண்டு.

❀ அறிந்தவர் "இது போதாது. பவர் பிராஜக்ட்டில் வரவேண்டும்" என்று கூறுவது ஆதாய மனப்பான்மையாக இருக்கலாம். அற்புதத்தைக் காண விழைவதாகவுமிருக்கலாம்.

❀ பையன் பட்டம் பெற்றுவிட்டான் என்றால், 'அது சரி. அது வேலையாக மாற வேண்டும்' என்பது அடுத்தகட்ட வெளிப்பாட்டை நாடுவது. அது சரி. தவறில்லை.

❀ ஆதாய மனப்பான்மை சரியில்லை. ஆனால் மனப்பான்மை மனநிலையைப் பொருத்தது. வாயால் வெளிப்படும் சொல்லைப் பொருத்ததன்று.

❀ உடலிலிருந்து ஆன்மாவரை உணர்வு, மனம்மூலமாக உயர்ந்து, மீண்டும் ஆன்மாவிலிருந்து உடல்வரை கீழிறங்கி வருவது பரிணாமம். ஒவ்வொரு நிலையும் substance பொருள், ஜீவியம் எனப் பிரிகின்றது. இப்பரிணாம நிலைகளை அறிந்தால் அடுத்த கட்ட வெளிப்பாட்டை மனம் நாடுவது முன்னேற்றம்என அறிகிறோம்.

❀ 'உன் பிரியம் யாருக்கு வேண்டும்? எனக்கு வேண்டியது உன் பணம்' என்பது ஆதாய மனப்பான்மை.

❀ ஆதாய மனப்பான்மை ஆண்டவனிடம் எழுந்தால், ஆதாயம் வாராது, அருளும் வாராது.

❀ ஆதாய மனப்பான்மை ஆதாயத்தை நிரந்தரமாக விலக்க வல்லது.
அது அனைத்து நல்லதையும் விலக்கும்.
அது முக்கியமாக அன்பை விலக்கும்.
அன்பர் நம்மை விட்டு நகர்ந்தால் அது நம்மிடம் உள்ளதுஎன யூகிக்கலாம்.
ஆதாயம் பாதாளம்.

மனைவி - அது புரிந்தால், அதைக் கடந்து சமர்ப்பணம் பலிக்கும்:

✡ சமர்ப்பணம் பலிக்க, புரிவது உதவும் என்பது இதுதான்.

அறிவு எந்தக் காரியத்திற்கும் உதவியாக இருப்பதுபோல் சமர்ப்பணத்திற்கும் உதவும்.

அறிவு உதவும்; அறிவு தடை செய்யும்; அறிவு செயல்படுவது நம்மைப் பொருத்தது.

கல்லூரி மாணவர்கள் அளவு கடந்து குடிக்கிறார்கள். ஒரு முக்கியமான காரணம், அப்படிக் குடிக்காவிட்டால் மற்றவர்கள் விலக்கி விடுவார்கள். சராசரியாக எவ்வளவு மாணவர்கள் குடிக்கிறார்கள்



என்று கணக்கெடுத்து அதை விளம்பரப்படுத்தினார்கள். உடனே மாணவர்கள் குடிப்பது அதிகமாகக் குறைந்தது.

விவரமில்லாமல் நாம் செய்யும் தவறுகள்
அறிவு தெளிவுபடுவதால் பெரும்பாலும் குறையும்.

✡ ஆன்மாவின் அம்சங்கள் 12. மேலும் கூறலாம். அவை:

மௌனம், அமைதி, சத்தியம், நன்மை, அறிவு, ஜோதி, உறுதி, அன்பு, சந்தோஷம், அழகு, தூய்மை, அனந்தம், அமரத்துவம் போன்றவை.

❀ அறிவு இவற்றுள் எதனுடன் இணைந்தாலும் பெரிய நல்லது உற்பத்தியாகும்.

❀ எந்தப் பெரிய நல்லதும் இவற்றுள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவை இணைவதால் ஏற்படுவதாகும்.

❀ அறிவு உறுதியுடன் சேர்ந்தால் சக்தி பிறக்கும்.
அறிவு மௌனத்துடன் கலந்தால் மேதாவிலாசம் எழும்.

❀ நல்லது என்பது சத்தியமும் அறிவும் இணைந்ததே.

❀ அன்பு அறிவு பெற்றால் இனிமை எழும்.

❀ அமைதியும், உறுதியும் சேர்ந்து சுமுகம் உற்பத்தியாகிறது.

❀ உறுதியுடன் மௌனம் சேர்வது சாதனை.

❀ அறிவுடன் அமைதி சேர்வது ஞானம்.

❀ ஞானம் சத்தியத்துடன் சேர்வது உலகுக்குரிய சாதனை.

❀ அறிவு சமர்ப்பணத்துடன் சேர்ந்து சரணாகதியாகிறது.

❀ சரணாகதியுடன் ஞானம் இணைவது பிரம்மம்.

❀ அறிவும் ஆனந்தமும் இணைவது ஆனந்தமான அனுபவம்.

❀ உறுதியும் தூய்மையும் சேர்வது ஆன்மீகத் தலைமை.

❀ உறுதி எதனுடன் சேர்ந்தாலும் சாதனை, தலைமை உற்பத்தி ஆகும்.

❀ மௌனமும் அனந்தமும் பிரம்மத்திற்கு அழைத்துச் செல்லும்.

❀ உறுதியும், சத்தியமும் தூய்மையுடன் சேர்ந்தால் அமரத்துவம் எழும்.

மனைவி - மனம் ஆதாயத்தைத் தாண்டிப் போக மறுக்கிறது:

✡ மறுப்பு உடலுக்குரியது.

✡ புதியதை மறுப்பது, உள்ளதைப் - பழைய பழக்கத்தைப் - பிடிவாதமாகப் பின்பற்றும்.

✡ ஆதாயம் கண்ணுக்குத் தெரியும்; கையால் தொடலாம். இலட்சியம் தெரியாது; தொட முடியாது.

✡ ஆதாயத்தைத் தாண்டிப் போக முடியாத மனம், ஜடமான மனம் Physical mind.

✡ காட்டில் வாழ்பவனுக்கு மாமிசம் தெரியும்; அஹிம்சை இலட்சியம், தெரியாது. 'அஹிம்சை என்றால் என்ன?' என்று கேட்பான். அவன் உடலால் வாழ்பவன். அவன் மனம் சிந்திக்கும் மனமில்லை; ஜட மனம். தொடு உணர்ச்சி அவன் அறிவு. நாம் இன்னும் பல விஷயங்களில் அந்நிலையிலிருப்பதால், நமக்கு மனம் ஆதாயத்தைத் தாண்டிப் போக மறுக்கிறது.

✡ ஜடமனம் ஆதாயத்தைத் தாண்டிப் போக மறுப்பதைப்போல் vital mind உணர்வின்மனம் பாசத்தைக் கடந்து வாராது. ஜட்ஜ்முன் உறவினர் குற்றம் சாட்டப்பட்டு நின்றால் அவர் பாசம் சட்டத்தைக் காணாது; குற்றத்தைக் காணாது; பாசத்தை மட்டும் காணும்.

"அவன் குற்றவாளியில்லை" எனக் கூச்சமற்றுக் கூறுவார்.

✡ சிந்திக்கும் மனம் thinking mind, சிந்தனையைக் கருதும்; பாசம் அறியாது. உடலின்பற்று அதற்கில்லை. 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை வேலைமாற்றம் செய்வது சட்டம் என்பதை அதிகாரி சிந்திக்கும் மனத்தால் கருதினால், 'என் மனைவிக்கு அடுத்த மாதம் பிரசவம்' என்பது அவர் காதில் விழாது. நண்பர் இரகஸ்யமானவர், நம்பிக்-



கைக்குரியவரில்லை என்று உணர்வு கூறினாலும் சிந்திப்பவன் 'என் நண்பனுக்கு நான் உண்மையாக இருக்க வேண்டும்' என்று கருதி-னால் அவனிடம் இரகஸ்யம் போகக்கூடாதுஎன்று உணர்வு அறிவுறுத்-தினாலும், அவனிடம் அதைச் சொல்லாமலிருக்க மாட்டான்.

✡ சிந்திக்கும் மனத்தைக் கடந்தது மௌனமான மனம்.

மௌனமான மனம் ஆதாயத்தைக் கருதாது.

அதனால் ஆதாயத்தைக் கருத முடியாது.

ஆதாயம் ஜடமான பொருள்.

மௌனத்திற்கு சூட்சுமம் உண்டு.

மௌனத்திற்கு ஜடமான பொருளில்லை.

அதனால் மௌனமான மனம் ஆதாயத்தைப் பொருத்தவரை மௌனம் சாதிக்கும்.

அம்மௌனம் ஜடத்தை அசைக்கும்; ஜடத்தைத் தன்னுட்கொண்டது.

தாயாருக்கு அம்மௌனமில்லை. பொருளற்ற மௌனம் அவருக்குண்டு.

தாயார் மௌனம் காரியங்களைச் சாதிக்கிறது. அதனால் ஜடத்தை அசைக்க முடியாது. ஜடத்தைத் தன்னுட்கொண்ட மௌனம் அதுவன்று.

பார்ட்னர் - நாம் ஜடமாக இருப்பதால் ஜடம் புரிகிறது. மனமாகவும் ஆகவில்லை:

✡ அன்னை இக்குடும்பத்தில் ஜடத்தில் செயல்படுவதால் கம்பனி, பவர் பிராஜக்ட் கமிஷன் வருகிறது. மேல் நோக்கிப் போய் கீழிறங்கி வந்து ஜடத்தில் முடியுமிடத்தில் 150 கோடி கமிஷன் ஏற்பாடாகியுள்ளது. கணவர் முதல் நிலை ஜடம். கமிஷன் முடிவான நிலைக்குரிய ஜடம். 1. ஜடம், 2. உணர்வு, 3. மனம், 4. ஆன்மா, 5. ஆன்மா மனத்தில் வெளிப்படுவது, 6. ஆன்மா உணர்வில் வெளிப்படுவது, 7. ஆன்மா

ஜடத்தில் வெளிப்படுவது.

அன்னை சக்தி அத்தனை நிலைகளில் செயல்பட்டாலும் கமிஷன் பெற 7ஆம் நிலையில் செயல்பட வேண்டும்.

- ❀ 7ஆம் நிலையில் கணவரிருப்பது வேறு. 7ஆம் நிலையில் தாயாரால், தாயார் பக்தியால், சூழல் செயல்படுவது வேறு.
- ❀ 150 கோடி ரூபாய் கமிஷனில் கணவருக்கு, இக்குடும்பத்திற்குப் பங்குண்டு என்பது தாயாருடைய பக்திக்குரிய பலன்; கணவருடைய நம்பிக்கைக்குரிய பலனில்லை.
- ❀ தாயாருடைய பக்தியால் வந்ததைக் குடும்பம் பெற (negative qualification) குடும்பம் எள்ளளவும் தவறு செய்யாமலிருக்க வேண்டும்.
- ❀ கதையில் தாயார் எதிர்பார்ப்பது அதுவே.

  பெரியவனின் கேலி, சிறியவன் மனம் புண்படுவது, பெண் 'ஆதாயமில்லாவிட்டால் அன்னை எதற்கு', கணவர் 'அன்னை பிராஜக்ட்மூலம் வரவேண்டும்' என்ற மனநிலைகளைக் கைவிட்டு நன்றியுடன் வந்ததைப் பெறவேண்டும்.

- ✡ அன்னை நம்மை 7ஆம் நிலையில் எதிர்பார்க்கிறார்.
- ✡ நாம், கணவர்போல முதல் நிலையிருக்கிறோம்.
- ✡ இந்த 7 நிலைகளுக்கும் நம்மால் ஏற்பட்ட மாறுதல், சூழலால் ஏற்பட்ட மாறுதல் என்ற வித்தியாசம் உண்டு.
- ✡ இந்த 7 நிலைகட்கும் மூன்று பிரிவுகள் - மனம், உணர்வு, உடல், 1 to 9 - உண்டு.
- ✡ இந்த 7 நிலைகட்கும் ஜடப்பொருள், ஜீவியம் - Substance, Consciousness - என்ற பிரிவுகள் உண்டு.
- ✡ இந்த 7 நிலைகட்கும் வேண்டியது, வேண்டாதது - positive, negative - என்ற பிரிவுகள் உண்டு.
- ✡ இந்த 7 நிலைகட்கும் காலம், இடம் - Time and Space - உண்டு.



- ✡ இந்த 7 நிலைகட்கும் ஆன்மாவின் 12 அம்சங்களும் உண்டு. அதற்கும் பிரிவுகள் உண்டு.
- ✡ முதல் நிலையிலிருந்து முடிவான நிலைவரை நாம் கற்பனையாகச் சிந்தித்துப் பார்க்கலாம்.
- ✡ எந்தத் தவறும், வீட்டு மனிதர் எவரும் செய்யாவிட்டால், கமிஷன் கைக்கு வரும்.
- ✡ அது தாயார் பக்தியால் வந்ததைக் குடும்பம் தாயாருக்குள்ள - அன்னை பக்தையான தாயாருக்குள்ள - பிரியத்துடன், குறைந்தபட்சம் மரியாதையுடன் நடந்துகொண்டால் பெற்றுக்கொள்ளலாம்.
- ✡ அதை நல்லெண்ணம், பண்பு என்கிறோம்.
- ✡ அது பார்ட்னர் ஒருவருக்கு மட்டுமேயிருக்கிறது.
- ✡ குழந்தைகளுக்கு அவர் தாயார், கணவனுக்கு அவர் மனைவி என்பது இன்றைய நிலை. இது தத்துக்குத்தலான (precarious) உறவு. எந்த நிமிஷமும் கணவர் தம் அதிகாரத்தைச் செலுத்தலாம், குழந்தைகள் கோணல் செய்யலாம். அது தவறாகும்.

பார்ட்னர் - எண்ணமற்ற சொல் சிறந்தது. ஆனந்தமே எண்ணமாகவும், செயலாகவுமானால் முழுமை பெறுகிறது:

மனைவி - விஷயம் என்பது ஆனந்தம், ஆச்சரியம், செயல், எண்ணம் அதனுள் உள்ளன:

- ✡ எண்ணமற்றபொழுது சொல் எழாது. அப்படி எழும் சொல்லுக்குச் சக்தியுண்டு. அது மந்திர சக்தி.
- ✡ உலகமே ஆனந்தத்தில் எழுந்தது. இருப்பினும் எண்ணமும், செயலும் ஆனந்தத்திலிருந்து பிரிந்துள்ளது. 8 வயது குழந்தைக்கு, எல்லாம் செய்வது தாய். அவளும் கடமைகளை மட்டும் செய்து, பாசம் அற்றிருப்பதுண்டு. பாசமிருந்தால் முழுமை பெறும். ஆனந்தத்தில் எண்ணமும், செயலும் உற்பத்தியானாலும், ஆனந்தம் அவற்றுடன்

இணைந்து வெளிப்படுவது முழுமை.

- ✡ எல்லா MLAக்களையும் பொதுமக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் எதிர்ப்பில்லாமல் மக்கள் ஒருமனதாக, ஆர்வமாக ஒரு MLAயைத் தேர்ந்தெடுப்பது அரிது. அது விசேஷம்.
- ✡ விஷயம் என்பது செயல். செயல், நாட்டு விடுதலைபோல் பெரியதாகவோ, அறுவடைபோல் சிறியதாகவோ இருக்கலாம். அறுவடையையும் பல சிறு செயல்களாகப் பிரித்தால், காவல் அதனுள் மிகச்சிறு செயலாகும்.
- ✡ எல்லாச் செயல்களும் ஆனந்தத்தில் உற்பத்தியாகின்றன.
- ✡ விஷயம் செயலானால், செயல் என்பது என்ன?
- ✡ ரூபம் பெற்ற சக்தி செயலெனப்படும்.
- ✡ உட்கார்ந்தவன் எழுந்திருப்பது ஒரு செயல்.
- ✡ செயல் எண்ணத்தில் ஆரம்பிக்கிறது.
- ✡ அச்செயலும், சிருஷ்டியும், போரை வெல்வதும், பெரும் காரியத்தை முடிப்பதும் அமைப்பைப் பொருத்தவரை ஒன்றே.
- ✡ ஜடத்தின் அடிக்கல் அணு.
- ✡ வாழ்வின் அடிக்கல் செயல்.
- ✡ அணுவினுள் உலகம் உள்ளது.
- ✡ செயலினுள் உலகம் உள்ளது.
- ✡ செயலை அறிந்தவன் செய்வது கூடிவரும்.
- ✡ செயல் உற்பத்தியாவது ஆனந்தம்.
- ✡ ஆனந்தம் அச்செயல்மூலம் வெளிப்படுவது சிறப்பு, முழுமை.
- ✡ நாம் சொல்வதைக் குழந்தை திருப்பிச் சொன்னால், குழந்தை சொல்லைக் கற்றது.
- ✡ நமக்கு அச்சொல் - கதை - புரிவதுபோல் குழந்தையும் புரிந்து கொள்வது முழுமை.



- ✡ குழந்தை ''கதை சொல்லுங்கள்'' என்றபொழுது 'கதை' என்ற சொல்லைப் புரிந்து பேசுகிறது. அடுத்த குழந்தையிடம் "வா, கதை சொல்கிறேன்'' எனில் 'கதை' என்ற சொல்மூலம் குழந்தையின் ஆனந்தம் வெளிப்படுகிறது. அவ்வுணர்வு முழுமைக்கு முழுமை தரும்.
- ✡ எண்ணம் முழுமைபெற அதன் வழி ஆனந்தம் வெளிப்பட வேண்டும்.

  செயல் முழுமைபெற அதன் வழி ஆனந்தம் வெளிப்பட வேண்டும்.

  எது முழுமை பெறவேண்டுமானாலும், அதன் வழி ஆனந்தம் வெளிப்பட வேண்டும்.

  ஆனந்தம் வெளிப்படாமல் எதுவும் முழுமை பெறாது.

  எண்ணமற்ற சொல் ஆனந்தம் வெளிப்படும் தகுதியுள்ளது.

பார்ட்னர் - **எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது அதுதானா?**

- ✡ மனிதன் தேடுவது சந்தோஷம்.
- ✡ எப்பொழுதும் அது கிடைப்பது வாழ்வின் பூர்த்தி.
- ✡ ஆனந்தம் மனித வாழ்வில் சந்தோஷமாகிறது.
- ✡ சத், சித்தாகி ஆனந்தமாகும்பொழுது சச்சிதானந்தம் பூர்த்தியாகிறது.
- ✡ ஆனந்தம் மேல்உலகுக்குரியது.
- ✡ அதற்கு மறுபுறம் - வலி - அந்த லோகத்திலில்லை.
- ✡ அதன் மறுபுறமான வலி மனித வாழ்வுக்குரியது.
- ✡ மனித வாழ்வில் துன்பமும், இன்பமும் மாறி மாறி வருகின்றன.
- ✡ மாறி மாறி வாராமல் இன்பம் மட்டும் இருப்பது வெற்றி, பூர்த்தி.
- ✡ மாறி மாறி வருவது மனித இயல்பு.
- ✡ அதை நாடுவது நம் இஷ்டம் (choice).
- ✡ நாம் எப்பொழுதும் இன்பத்தை நாடினால் சந்தோஷமாக இருக்கலாம்.

✡ 'நாம்' என்பதிலிருந்து - மாறி மாறி வரும் நிலை - மாறுவது இயல்பு.

✡ 'நாம்' என்ற இடத்தில் சைத்தியப்புருஷன் வந்துவிட்டால், அவனுக்கு இன்பம் மட்டும் உண்டு.

❀ 'நாம்' உள்ளவரை மாறிமாறி வரும்.

❀ சைத்தியப்புருஷனுக்கு மாற்றமில்லை.

✡ 'நாம்' மேல்மனத்திலிருக்கிறது.

✡ அதற்கு எண்ணம் ஓடும்.

✡ கடந்ததைக் கருதும்.

✡ சிறியதாக இருக்கும்.

✡ தன்னை முக்கியமாகக் கருதும்.

✡ சைத்தியப்புருஷன் அடிமனத்திலுள்ளது.

✡ பாதாளமும், பரமாத்மாவும் சேருமிடம் அடிமனம்.

✡ அது பிரபஞ்சம் முழுவதும் பரவக்கூடியது.

✡ அடிமனத்திலும் சைத்தியப்புருஷன் குகையில் ஒளிந்துகொண்டுள்ளது.

✡ அடிமனத்திற்கும் மேல்மனத்திற்கும் இடையே உள்மனம் உண்டு.

✡ உள்மனம் காலத்தைக் கடந்தது.

✡ மோட்சம் தரவல்லது.

✡ நிர்வாணம் தரவல்லது.

✡ அவற்றை ஏற்றால் அடிமனம் போகமுடியாது.

✡ அவை தவத்திற்குரியவை.

✡ நாம் ஏற்பது சமர்ப்பணம்.

✡ சமர்ப்பணம் சைத்தியப்புருஷனில் முடியும்.

✡ அங்கு சந்தோஷம் நிரந்தரமாக உண்டு.

பார்ட்னர் - அழியாத நினைவு தவறாத சமர்ப்பணம். நினைத்துச் செய்வது பகுதி; தோன்றும்முன் செய்வது முழுமை. நினைவு மையம் மனத்திலிருந்து நெஞ்சுக்குப் பின்னால் போய் நிலைக்க வேண்டும்:



மனைவி - செயல் வாழ்வு, நினைவு யோகம்:

✡ நினைவு, நாம் முயன்று நினைவுபடுத்துவது.

✡ அழியும் நினைவை முனைந்து நிலைப்படுத்துவது நினைவு.

✡ நினைவு மனித முயற்சி.

✡ நினைவு மேல்மன வாழ்வு.

✡ நாம் 'நினைவு' என்பது அழியும் நினைவு.

✡ அழியாத நினைவு ஆத்மாவின் ஆர்வம்.

✡ தானே அழியாத நினைவு, அழிய முடியாத நினைவை, அழியாத நினைவு என்கிறோம்.

✡ மேல்மனத்தைக் கடந்த உள்மனத்தின் நினைவு அழியாது.

✡ அடிமனத்தின் நினைவு பிரபஞ்ச நினைவாக இருப்பதால் அது மேல்மன நினைவுபோல் அழியும் தன்மையுடையதன்று. அது அழிய முடியாத நினைவு.

✡ மேல்மனம் பகுதி.

✡ தோன்றுவது மேல்மனத்தில்.

✡ என்றும் தோன்றுவது அடிமனம்.

✡ என்றும் இருப்பது அது என்பதால் அதற்குத் தோன்றுவது என்பது இல்லை.

✡ தோன்றும்முன் செய்வது அடிமனத்திலிருந்து செய்வது.

✡ அதற்கு முழுமையுண்டு. முழுமை மட்டும் உண்டு.

✡ நினைவு மனத்திற்குரியது - மேல்மனத்திற்கு.

✡ அடிமனம் நெஞ்சுக்குப் பின்னாலுள்ளது.

✡ உள்மனம் புருவ மத்திக்குரியது.

✡ மேல்மனத்திலிருந்து அடிமனம்போக உள்மனம் வழியாகப் போக வேண்டும்.

✡ தலையிலிருந்து புருவ மையத்திற்கு வந்து நெஞ்சுக்குப் பின்னால் போகும் பாதையது.

✡ வாழ்வுக்குரியது செயல்.

✡ செயலை நினைவால் நிலைநிறுத்துவது யோகம்.

✡ வாழ்வு யோகமானால் செயல் நினைவாகும்.

✡ நினைவே செயலைச் சாதிப்பது யோகம்.

✡ மேல்மனம், அடிமனம் என்றாலும்; பகுதி, முழுமை என்றாலும் ஒன்றே.

✡ காலம், காலத்துள் காலத்தைக் கடந்தது என்றாலும்; மேல்மனம், அடிமனம் என்றாலும் ஒன்றே.

மனைவி - தீயசக்தி மாறி பக்தி பெறுவது வாழ்வில் விலக வேண்டியவை விலகுவதாகும். நடைமுறையில் பெரிய தலைகள் உருளும்:

✡ தீயசக்தி என்பது, இறைவன் தவிர மற்ற எல்லாம் தீயசக்திகளே.

✡ வாழ்வில் anti-social forces சமூக விரோதிகள் என்பவர் யார்? சமூகத்திற்கு அடங்கி நடக்கும் நேரம் தவிர மற்ற நேரம் நம்மை கவனித்தால் எல்லா சக்திகளும் நம்முள் உள்ளன அத்தனையும் தீயசக்திகள்எனத் தெரியும். ஒரு ஹர்த்தால் வந்தால், அதுவே சந்தர்ப்பம்என அனைவரும் எதிரி மீது பழி தீர்த்துக் கொள்கின்றனர். பாகிஸ்தானிலிருந்து வந்த 50 லக்ஷம் இந்துக் குடும்பங்களும் செய்யாத அட்டூழியமில்லை.

  ❀ நாம் தீயசக்தி என்பது ஆன்மீக உண்மை.

  ❀ நாம் இப்படியே இருப்பதை விரும்புகிறோம்.



❀ நாம் மாற விரும்பவில்லை.

❀ எதிரியை அழிக்க மனம் துடிக்கிறது.

❀ விஷயம்என வந்துவிட்டால் நம்மைத் தவிர நமக்கு அனைவரும் எதிரி.

❀ தீயசக்தி தன்னை நிலைநாட்டப் பெரும்பாடுபடுகிறது.

❀ அது தவிர நம்மிடம் வேறு சக்திகளில்லைஎனத் தெளிவாக நாம் காண்கிறோம்.

❀ நாம் மாற விரும்புவது நம்மைப் பொருத்தவரை இறைவன் வரும் தருணம்.

❀ இதுவரை நாம் மாற விரும்பினோமாஎன நினைத்துப் பார்த்தால் இல்லைஎனத் தெரியும்.

❀ மாற வேண்டும்என வாயால் சொல்லியிருக்கிறோமாஎன நினைத்துப் பார்த்தால், அப்படி ஒரு நினைவு வந்ததாகத் தெரியவில்லை.

❀ அப்படி ஒரு நினைவு வந்திருந்தால் அத்துடன் 'அது வேண்டாம்' எனத் தீவிரமாகத் தோன்றியது இப்பொழுது நினைவு வரும்.

❀ மாறும் நிர்ப்பந்தம் வந்த நிகழ்ச்சிகளை நினைத்தால் இப்பொழுது அந்நினைவால் உடலெல்லாம் எரியும்.

❀ "நான் நல்லவன்,<br>நான் பெரியவன்,<br>உலகம் என்னைப் போற்ற வேண்டும்,<br>உலகம் எனக்குப் பணிய வேண்டும்,<br>நான் அவ்வளவு அறிவுடையவன்,<br>ஏன் என்அறிவை உலகம் ஏற்கவில்லை?"<br>என்பது சாதாரண மனிதச் சுபாவம்.

❀ மாறவேண்டும்என்ற நினைவு உணர்வாவது பக்தி.

❀ அந்த பக்தி நாயனார்கட்கிருந்தது; எளிய மனிதனுக்கில்லை.

❀ ஆழ்வார்கட்கிருந்தது.

❀ இராமனுஜருக்குப் பின்னால் அதுபோன்ற பக்தி எழவில்லைஎன பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

❀ பக்தி எழுந்தால் முன்தலைமுறைகள் தலையைச் சாய்க்கும்.

❀ பக்திமுன் அவை வாழ முடியாது.

கணவர் - அது மரணமில்லையா?
மனைவி - நமக்கு மரணம், வாழ்வில் உயர்ந்த ஜீவியம் உதயமாவது ஆகும்;
கணவர் - பயமாக இருக்கிறது:

✡ வீட்டிலிருந்து பையன் ஹாஸ்டலுக்குப் போனால், வேலை மாற்றம் வந்தால், வீடு மாற்றினால், பெண் திருமணமாகி கணவன் வீட்டிற்குப் போனால், மகன் அமெரிக்கா போனால் அத்துடன் எல்லாம் போய்விட்டதாக நாம் கருதுவதில்லை.

✡ பையன் வீட்டிலிருப்பதற்குப் பதிலாக ஹாஸ்டலிலிருக்கிறான், வேலை வேறு ஊரிலிருக்கிறது, பெண் கணவனுடன் புதுவாழ்வு வாழ்கிறாள், மகன் அமெரிக்காவில் படிக்கிறான்என நாம் அறிவோம். அடுத்த கட்டத்தில் அதே தெளிவு நமக்கிருப்பதில்லை. ஆத்மா அடுத்த உடலை நாடினால் நாம் அதை மரணம் என்கிறோம். அத்துடன் எல்லாம் முடிந்துவிட்டதாகக் கருதுகிறோம்.

ஆத்மா அழிவதில்லை, அதன் வாழ்வும் அழிவதேயில்லை

என்ற ஞானம் பெறாதவர்க்கு ஆன்மீகமில்லை, ஆன்மீக வாழ்வும் இல்லை. அரசியலில் பதவி மாறுகிறது, பதவி போகிறது, பதவி வருகிறது, மனிதன் மாறுவதில்லை.

✡ மேலும் ஆத்மா அடுத்த உடலை நாடுவது பிரமோஷன் வந்து மாற்றல் வருவதுபோன்றது.

✡ 5 வயதுக் குழந்தை தன் 3 வயது வாழ்வு போய்விட்டதாகப் புலம்புவதில்லை.



❀ 15 வயதில் சிறுவன் கல்லூரிக்குப் போனால், பம்பரம் விளையாட முடியவில்லைஎன சிணுங்குவதில்லை.

❀ ஏழை பணக்காரனானால், ஏழ்மையை இழந்ததற்கு வருந்துவது இல்லை.

❀ வியாதி போய் உடல்நலம் வந்தால் ஆஸ்பத்திரியைவிட்டு அகல மறுப்பவர்களில்லை.

❀ MLAஆக வெற்றி பெற்றபின் சட்டசபைபோவதற்குத் துக்கம் கொண்டாடுவதில்லை.

❀ 20 வருஷம் பிரிந்திருந்தவர் சேர்ந்தபின் பிரிவைப் பிரிய மறுப்பதில்லை.

❀ நாடு செல்வம் பெற்றால் நாம் ஏழ்மையை இழந்ததற்குக் கஷ்டப்படுவதில்லை.

❀ சுதந்திரம் வந்தது; ஏன் இந்த மாற்றம்என நாம் கேள்வி எழுப்புவது இல்லை.

❀ கோர்ட்டில் கேஸ் ஜெயித்தபின் கோர்ட்டு வாழ்வு போய்விட்டது என அவலப்படுவதில்லை.

❀ பிடித்த பிசாசு போனபின் அதை வருந்தி அழைப்பதில்லை.

❀ உயிர் அடுத்த உடலை நாடினால் துக்கம் கொண்டாடுகிறோம்.

❀ அதைக் கேட்ட கணவருக்குப் பயம் வருகிறது.

❀ கெட்டது போய் நல்லது வந்தவுடன் பயம் வருவது தீயசக்திக்கு.

❀ நாம் நம் எண்ணத்தை ஆராய்ச்சி செய்தால் நல்லதாக அங்கு ஒன்றுமில்லைஎன விளங்கும். எண்ணமே தீயதுஎன்பது அன்னை விளக்கம்.

பார்ட்னர் - சித்தி நம் முயற்சி, அருள் ஆண்டவன் தருவது:

✡ நம் முயற்சியை நாம் அறிவோம். முயற்சி முடிந்து அருள் ஆரம்பிக்கும்

இடம் நாம் அறியாதது. (We are unconscious of Grace).

✡ நம் முயற்சி கர்மத்தைக் கடப்பது. நாம் முயல்கிறோம். ஏன் முயல்கிறோம், எதற்காக முயல்கிறோம், எப்படி முயல்கிறோம்என்பது நாமறியாதது.

✡ முயற்சி, கர்மம், செயல், சலனம், சிருஷ்டி, பிரம்ம ஜனனம் ஆகியவை நம்மில் சந்திக்கின்றன. அவற்றுடன் காலம், இடம், மனம், அகந்தை, கண்டம், பிரம்மம், பரிணாமம் ஆகியவையும் அடுத்த கட்டத்தில் சந்திக்கின்றன.

- ❀ இவையனைத்தும் ஜீவாத்மாவின் மையம்.
- ❀ அவற்றுள்ளிருப்பது பரமாத்மா.
- ❀ ஜீவாத்மாவே பரமாத்மாஎன்ற ஞானம் - ஞானசித்தி - முடிவான சித்திகளில் ஒன்று.
- ❀ மேற்சொன்னவை அவற்றின் பகுதி.
- ❀ இந்த சித்தி முழுமையான பிரம்மம் நம்முள் சித்திப்பது.
- ❀ அதன் புறம் வாழ்வு.
- ❀ அதன் அகம், வாழ்வை உட்கொண்ட அகம்.
- ❀ அந்நிலைக்கு வந்த அன்னை, 'ஓஹோ, இறைவன் இப்படித்தான் ஆனந்தம் பெறுகிறானா' என வியந்தார்.
- ❀ முயற்சி, கர்மம், செயல், சலனம், சமுத்திரம், சிருஷ்டி, காலம், இடம், மனம், அகந்தை, கண்டம், பிரம்மம் ஆகியவற்றை இக்கண்ணோட்டத்தில் காண்பது, முழுமையான பிரம்மத்தை சிருஷ்டியும், பரிணாமமும் சந்திக்கும் இடத்தில் காணும் ஞானசித்தி.
- ❀ இதுவரை தத்துவம்.
- ❀ இக்கதையில் இந்தத் தத்துவங்களை எல்லா இடங்களிலும் காண முடிவது, இக்கதையால் பயன் பெறுவதாகும்.
- ❀ மேலே 12 அம்சங்கள் புறத்திலும், அகத்திலும் கூறப்பட்டுள்ளன.



- ❀ முயற்சி என்பது ஓர் அம்சம்.
- ❀ இக்கதையில் ஒரு பாத்திரத்தை எடுத்து 'முயற்சி' என்ற தலைப்பில் சிந்தனை செய்தால் பலன் பெரியது.
- ❀ அந்த ஆராய்ச்சி 'முயற்சி'யினுள் முழு உலகமும் உள்ளதைக் காட்டும்.
- ❀ பெரும்பலன் தரும் சிந்தனை அது. கைமேல் பலன் தரக்கூடியது.
- ❀ ஒரு சிறு முயற்சிக்கும் பெரும்பலனுண்டு என்பது கதையில் அநேக இடங்களில் வருவது.
- ❀ மனம் அவற்றை உணர வேண்டும்.
- ❀ அறிவு ஆராய்வது பலனுண்டு.

மனைவி - மனத்தில் வரவில்லைஎனில் அன்னை ஏற்றுக்கொண்டார்;
கணவர் - நம்மையே அன்னை எடுத்துக் கொண்டால் நல்லது;
மனைவி - கொடுத்தால் எடுத்துக்கொள்வார்:

✡ மனத்தில் பவர் பிராஜெக்ட் வரவில்லைஎன்பது பெரிய விஷயம். மனத்தில் வரவில்லைஎனில் நினைவில் வரவில்லைஎனப் பொருள்.

✡ நினைவு என்பது கடந்தகாலத்தை நிகழ்காலத்துடன் இணைப்பது.

✡ நினைவில்லைஎனில் கடந்தகாலமும், நிகழ்காலமும் இணைந்தன என்றாகும்.

✡ அது காலத்தைக் கடந்த நிலை.

✡ காலத்தைக் கடந்த நிலை தற்காலிகமாக ஏற்படுவதற்கும், நிலையாக ஏற்படுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

✡ தற்காலிகமாக நடப்பது நமக்கு காலத்தைக் கடக்கும் திறமையுள்ளது எனக் காட்டும்.

✡ திறமையிருந்தால் அதை எப்படி நிலையாகச் செய்வது?

- ❀ இதுவரை நமக்குத் திறமையில்லைஎன நினைத்திருந்தால்,

அந்நினைவு தவறுஎன அறிந்து, புதிய அறிவு ஏற்படுவது, பெற்றதை நிலையாகப்பெற உதவும்.

- ❀ காலத்தை மூன்றாகப் பிரிப்பது மனம்.
- ❀ கடந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே வந்து அவற்றைப் பிரித்த மனம் விலகியதால் அவை சேர்ந்தன.
- ❀ மனம் வேலை செய்தால் காலம் பிரியும்; மனம் வேலை செய்யாமல் இருந்தால் அவை சேரும்.
- ❀ மனம் வேலை செய்யாத நிலை மௌனம்.
- ❀ திறமையில்லைஎன நினைப்பதும், மனம் வேலை செய்வதும் ஒன்றே.
- ❀ மனம் வேலை செய்தால் திறமை குறையும்.
- ❀ திறமை பகுதி.
- ❀ திறனற்ற நிலை முழுமை.
- ❀ நினைவு, காலம், திறமையற்றது, அறிவில்லாதது, பகுதி ஆகிய அனைத்தும் ஒன்றே.
- ❀ நினைவழிந்து, காலத்தைக் கடந்து, மௌனமாகி, ஞானம் பெறுவதும் முழுமையும் ஒன்றே.
- ❀ அது சமர்ப்பணத்திற்குரிய நிலை.
- ❀ சமர்ப்பணம் தற்காலிகமாகப் பெற்றதை நிலையாகப் பெற்றுத் தரும்.
- ❀ சமர்ப்பணம் மேல்மனத்தினின்று அடிமனம் போகும் பாதை.

பார்ட்னர் - புரிவதற்கும், செய்வதற்கும் ஏகப்பட்ட தூரம்;
மனைவி - வாழ்வுக்கும், அன்னைக்கும் உள்ள தூரம்:

✡ வாழ்வில் பயம், தைரியமுண்டு. அன்னையில் தைரியம் மட்டும் உண்டு; பயமில்லை.



✡ Twelve o'clock High என்ற படத்தில் அமெரிக்க தளபதி கொஞ்சம் விமானங்களை வைத்துக்கொண்டு, ஹிட்லருடைய ஆயிரக்கணக்கான விமானங்களை எதிர்த்துப் போராடுகிறார். மனோ தைரியத்தால் விமானிகள் செயல்படுகிறார்கள். எதிர்ப்பு பிரம்மாண்டமாக இருப்பதால் ஒரு கட்டத்தில் விமானிகள் மனம் தளர்ந்தனர். அவர்கள் கமாண்டரும் 'அது சரி, அதற்கு மேல் விமானிகளைக் கட்டாயப்படுத்தக்கூடாது' என முடிவு செய்கிறார். அவர் பெயர் கீத் Keith. அவர் மேலதிகாரி Savage சாவேஜ். சாவேஜ் தளபதியின் கீழுள்ளவர். இம்மூவரும் சந்தித்துப் பேசியபொழுது தளபதி கீத் சொல்வதை ஏற்று அவரைப் பதவியிலிருந்து நீக்கி, சாவேஜை அந்த இடத்திற்கு நியமிக்கிறார். சாவேஜின் ஆவேசமான பேச்சு விமானிகளை அசைக்கவில்லை. பிஷப் என்ற விமானி மீது சாவேஜுக்கு நம்பிக்கையிருப்பதால், பிஷப்பை அழைத்துப் பேசுகிறார். பிஷப் தாம் விமானிகள் பிரதிநிதியாக வந்திருப்பதாகக் கூறி அனைவரும் டிரான்ஸ்பர் கேட்பதாகக் கூறுகிறார். மனம் விட்டுப் போன சாவேஜ் ''வேறு இலாக்காவுக்குப் போகலாம். கடமையை விட்டு மாற்றல் கேட்கலாமா?'' என்கிறார். பிஷப் பிடிகொடுக்காமல் எழுந்து போனாலும், மனம் மாறி மாற்றலை வாபஸ் செய்கிறார். அனைவரும் அவரைப் பின்தொடர்ந்தனர். நிலைமை எதிராக மாறி டிரைவர், ஆபீஸ் மானேஜர் உள்பட அனைவரும் திருட்டுத்தனமாக விமானத்தில் நுழைந்து, எதிரியை நாசம் செய்கின்றனர். சாவேஜால் மனம் உடைந்த இளைஞர்களுக்கு உற்சாகமூட்டி, தெம்பு கொடுத்து, தைரியம் கொடுத்து சாதிக்க முடிகிறது. இது புரிவதற்கும் செய்வதற்கும் உள்ள தூரம்.

✡ வாழ்வுக்கும் அன்னை வாழ்வுக்கும் உள்ள தூரம் மேலும் அதிகம்.

- ❀ நாம் வாழ்வால் நிரம்பியுள்ளோம். We are occupied by life.
- ❀ நமக்கு நல்ல எண்ணம்என்பது இல்லை. அப்படியொன்றிருந்தால் அதுவே நலமான நல்லெண்ணமாகும்.
- ❀ எண்ணமே கெட்டதுஎன்பது அன்னை.

❀ அப்படி நம்மைச் சோதித்தால், நம் எல்லா எண்ணங்களும் கெட்ட எண்ணங்களாக இருக்கும்.

❀ அவை ஒவ்வொன்றிற்கும் வேகமிருக்கும்.

❀ நம்மால் இரகஸ்யத்தைக் காப்பாற்ற முடியாதுஎனில் வந்த செய்தியைச் சொல்லத் துடிப்போம்.

❀ பிறருக்கு உதவ ஆசையிருந்தால், அதனால் அவருக்குப் பலனுண்டு என நம்புவோம். உதவத் துடிப்போம்.

❀ எந்தச் சுபாவமும், நேரம் வந்தால் துடிக்கும்.

❀ துடிப்புள்ளவரை அது நம் வாழ்வு.

❀ துடிப்பு அடங்க வேண்டும்.

❀ அன்னையை மட்டும் நம்முள் செயல்பட அனுமதிக்க வேண்டும் (equality) என்ற முடிவு வேண்டும். அது சமர்ப்பணமான முடிவு.

❀ எல்லா முடிவுகளும் சமர்ப்பணமாவது, அன்னை வாழ்வு.

அது நெடுநாளைய கம்பனி. அங்குத் தொழிலாளர்கள் சர்க்கார் ஆதரவோடு அராஜகம் செய்கிறார்கள்:

✡ சர்க்கார், முதலாளிக்கு ஆதரவாகப் பழைய நாட்களில் போலீஸ் உதவி செய்தது. முதலாளி அட்டகாசம் செய்தான்.

✡ இன்று தொழிலாளிக்கு ஆதரவாக போலீஸ் செயல்படுவதால், தொழிலாளி அழிச்சாட்டியம் செய்கிறான். அன்று அழிக்கப்பட்டவர், இன்று சுதந்திரம் பெற்றது, சமூக வெற்றி. ஆனால் நாட்டில் அராஜகம் அழியவில்லை. அதுவே இன்றைய நிலை.

✡ அதிகாரத்தின் ஆதரவு அழிச்சாட்டியம் செய்யச் சொல்லும்.

✡ நம் வாழ்வில் நாம் அதை முழுமையாகச் செய்கிறோம். அதை அறிவது ஞானம்.

✡ அன்னையிடம் வந்தபின் நாம் பெறும் சக்தியை அதிகாரமாக மாற்றி மேலும் அழும்பு செய்கிறோம்.



✡ இந்தக் கதையில் கணவர் வயிற்றுவலிபடும் குமாஸ்தாவைக் கண்டு கொள்ளாமலிருப்பதும், பெரியவன் சிறியவனைக் கேலி செய்வதும், கவர்னர் பார்ட்டிக்குப் புதுடிரஸ் கேட்பதும், கோயம்புத்தூருக்குக் காரில் போகவேண்டும் என்பதும், நமக்கு அது போன்ற செயல்கள் மேலும் உண்டு.

❀ எட்டமுடியாத உச்சிக்குத் தாயாரால் குடும்பம் வந்துவிட்டது எனக் கண்டபின்னும், கணவன் அவரை மனைவியாகவே நடத்துவது, வரும் அருளில் பெரும்பாகம் தடைப்படும்என அறியாதது அப்படிப்பட்ட செயல்.

❀ புதிய அந்தஸ்தை நகைக்கடையில் காட்ட முயல்கிறார்.

❀ பார்ட்னர் கொடுத்ததைத் தமக்குரியதாகப் பெற்றுக்கொள்கிறார்.

❀ வருவது, வரவேண்டியதுதானே என்ற நினைவு தொழிலாளியின் அராஜகம் போன்றது.

✡ நம் மனம் பழைய மனநிலையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

✡ அதன் வெளிப்பாடுகள் ஆயிரம்.

✡ அன்னையும், அவர் ஜீவியமும் வந்தபின், அவ்வெளிப்பாடுகள் அழிச்சாட்டியம் என நாமறியோம்.

✡ அராஜகம் செய்யக்கூடாதுஎனில் அவ்வெளிப்பாடுகள் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்தி, நேர் எதிராக மாற்ற முயல வேண்டும்.

✡ நமக்கு அப்படியொரு கடமையுண்டுஎன நாம் அறியோம்.

✡ அதைச் செய்யாதவரை முதலாளியின் அராஜகம், தொழிலாளியின் அராஜகம், பொதுவான அராஜகம் ஆகியவற்றைப் பேச நமக்குரிமை இல்லை.

✡ உலகில், உலகின் சூழலில் அராஜகம் உண்டு. அது அழியாதவரை எவர்மூலமாகவாவது வெளிப்படும்.

✡ அன்னை ஜீவியம் அராஜகத்திற்கு எதிரி.

✡ நமக்கு அது இருப்பதால், நம்மிடம் முதலாளி தொடர்புகொண்டால்

அவருக்குத் தொழிலாளிகளிடமிருந்து விடுதலை கிடைக்கும்.

✡ இக்கதையில் அதுவும் கிடைக்கிறது.

பொதுவாகப் பார்ட்னர் பேசியதிலிருந்து அவர்கள் சில விஷயங்களைப் பின்பற்றிப் பலன் பெற்றிருக்கின்றனர்:

✡ மனிதன் சூட்சுமமானவன்.

✡ செய்தி சூட்சும உலகில் பரவும்.

✡ சூட்சும உலகில் பரவுவது அதிவேகமாகப் பரவும்.

✡ நேற்று ஓர் ஊரில் நடந்த செய்தி இன்று அடுத்த ஊர்களுக்கெல்லாம் பரவுகிறது.

✡ சமூகம் புதுப்பணக்காரனை, அரசியல் தலைவர்களை, நடிகைகளை, பெரிய மனிதர்கள் என்பவர்களைக் கூர்ந்து கவனிக்கிறது. காலையில் இங்கெல்லாம் நடப்பது மாலையில் ஊர் முழுவதும் பரவும்.

✡ சூட்சுமமாகப் பரவுவது வாய்மொழியாக ஆர்வமாகப் பரவுவது.

✡ பொதுவாகக் காதல் திருமணம், ஓடிப்போன பெண், கொலை, மரணம், கொள்ளை, திருட்டு, அசகாயச் சூரனுடைய அதிசயமான வெற்றி, தலைவர் வருகை வாய்மொழியாகப் பரவும். அதற்குப் பத்திரிகை உதவி தேவையில்லை.

✡ சூட்சும உலகில் பரவுவது வேறு; சூட்சுமமாகப் பரவுவது வேறு.

✡ சூட்சும உலகில் பரவுவது எறும்புக்கு மழை வருவது தெரிவதுபோல் முன்கூட்டியே வாய்மொழியுமில்லாமல் உணர்வில் தெரிவது.

✡ தற்பொழுது வந்துள்ள Internet இவையிரண்டையும் கலந்ததுபோல் செயல்படுகிறது.

✡ வதந்தி உள்ளூருக்குரியது. நாடு முழுவதும் பரவும் வதந்தி நாட்டுக்கு உரிய செய்தியைப் பற்றியது.



✡ இன்டர்நெட் உள்ளூர் வதந்தியை உலகம் முழுவதும் கொண்டு போகும் அமைப்புடையது.

✡ தனக்கு வேண்டிய விஷயம் எவரிடமிருந்தாலும், அச்சொல் அரைகுறையாகக் காதில் விழுந்தாலும், அதை முழுவதும் அறிந்து பலன் பெறுவது மனித சுபாவம்.

✡ இரண்டு கோடி சம்பாதிக்கும் கம்பனி மூட வேண்டிய நேரத்தில், கன்சல்டண்ட் "நீங்கள் 12 கோடி சம்பாதிக்க முடியும்" என்று கூறிய ஒரு வார்த்தையிலிருந்து, "நீங்கள் எங்கள் கம்பனியுள் 12 கோடியைக் கண்டால் அதை நாங்கள் எடுக்க முடியும்" என்று கூறி எடுத்த கம்பனியைப் பற்றி நான் எழுதுவதுண்டு.

- ❀ பார்ட்னர் பேசுபவை பலன் தரக்கூடியதுஎன்று புரிந்தவுடன், அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டு இப்பெருமுதலாளி பயன் பெற்றிருக்கிறார்.
- ❀ வெளிநாட்டு கன்ஸல்டண்டை ஒரு நாளைக்கு 1 லட்சம் கொடுத்து ஒரு கம்பனி வைத்தவுடன், தொழிலில் போட்டியிடுபவர் அந்தக் கம்பனியில் நடப்பதை வேவு பார்த்து அக்கம்பனி பெறும் பலனுக்குச் சமமாகச் செலவில்லாமல் பலன் பெறுகின்றனர். இது மனித சூட்சுமம்.
- ❀ ஒரு மனிதனுக்குச் செல்வமோ, செல்வாக்கோ, வேறு எந்த விஷயமோ இருந்தால் அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அனைவருக்கும் அது சூட்சுமமாகத் தெரிந்துவிடுகிறது.

"பார்த்தால் தெரியவில்லையா,
இதை வேறு எடுத்துச் சொல்ல வேண்டுமா?"

எனக் கேட்பதை நாம் அறிவோம்.

2, 3 பேர் பார்ட்னரைச் சூழ்ந்து கொண்டு முதலாளிக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா எனக் கேட்டனர்:

✡ ஒருவருக்கு உதவி செய்ய மற்றவர் எடுக்கும் முயற்சி இது.

- ❀ பொதுவாக இது மனிதாபிமானம்.
- ❀ இங்கு ஒருவர் பெருமுதலாளி என்பதால் மற்றவர் முன்வருவது.
- ❀ குடும்பத்தில், நண்பரிடையே இது போன்ற பரோபகாரம் எழும்.
- ❀ அது பற்றால் எழும், பாசத்தால் வரும், பணத்தால் வரும், பதவியால் வரும். எதுவுமின்றி எழுவது மனிதாபிமானம்.
- ❀ மனித சுயநலம் பரநலமாகும் நேரமிது.
- ❀ சுயநலம் ஊருக்காகப் பரநலமாகும்.
- ❀ சுயநலம் சுயநலத்திற்காகப் பரநலமாகும்.
- ❀ எக்காரணத்தால் பரநலம் ஏற்பட்டாலும், பரநலம் சுயநலத்தைவிட நல்லது.
- ❀ இது கடுமையான நேரம்.
- ❀ இந்த முதலாளி, இந்த நேரம் யார் வீட்டுக்குப் போகவும் தயாராக இருக்கிறார். அவர் அப்படியிருப்பதால் அவருக்குப் பலன் எதிர்பாராமல் வருகிறது.
- ❀ இந்த நேரத்திலும் 'என்னை வந்துப் பார்க்கச் சொல்' என்பது அகங்காரம்.
- ❀ ஒரு ஆபத்து ஏற்பட்டபொழுது அனைவருக்கும் இந்த நல்லெண்-ணம் எழுகிறது.
- ❀ பொய் மெய்யை எதிர்க்கும்பொழுது அனைவருக்கும் ஏதாவது செய்து மெய்யை அழிக்கத் தோன்றும். அப்பொழுதும் அனைவருக்-கும் சமயோசிதமாக இப்படித் தோன்றும். சமயோசிதம் மனிதனுக்கு உண்டு. நமக்கு பிறரை அழிக்க அது வரும். அது மாறி பிறர் வாழ சமயோசிதம் வருவது உலகம் அன்னை வாழ்வுக்குத் தயாராகிவிட்டது எனப்பொருள்.
- ❀ சமூகத்தில் பல கட்டங்கள் (levels of social existence) உண்டு. எந்த கட்டம் சுயநலத்தைப் பொருத்த அளவில் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிவது social wisdom சமூகத்தின் விவேகம்.
- ❀ இந்த கட்டத்தில் சமூகம் என்றும் உயிரோடிருக்கிறது.

  இதே கட்டம் மனிதனுக்குண்டு.

  மனிதன் சதாசர்வகாலமும் ஜீவனோடுள்ள நிலையிது.

  மனிதன் இந்நிலையில் சமூகத்தையொட்டி அல்லது தன்னை-யொட்டி - சுயநலமாக - வாழ்கிறான்.

  இந்த மையத்தில் ஒருவன் அன்னையை ஏற்றால் அவன் அன்பன் ஆகிறான்.

  இம்மையம் உணர்வால் இயங்குகிறது.

  இம்மையம் ஆன்மாவால் இயங்க வேண்டும் என்பது பூரண யோகம்.

  அது சாட்சிப்புருஷனில்லை; psychic being வளரும் ஆன்மா.

  சாட்சிப்புருஷன் இங்கு எழுந்தால் க்ஷணத்தில் செயல்பட்டு விலகுவான்.

  வளரும் ஆன்மா இங்கு எழுந்தால், க்ஷணத்தில் செயல்படும். மீண்டும் அதை விட்டு விலகாது.

  கவர்னர் நம் கிராமத்திற்கு வந்தால் வருவார், உடன் போவார். அவருள்ள நேரம் அனைத்தும் பறக்கும்.

  கவர்னர் நம்மூரில் பிறந்தவரானால், எந்த நேரமும் அவர் நம்மூருக்கு உரியவர்.
- ❀ சமூகம் - நம் உணர்வு - வளரும் ஆன்மாபோல இன்றைய வாழ்வில் செயல்படுகிறது.

*தொடரும்.....*

❀❀❀

**ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பணம்!**

கடந்த 9 வருடங்களாக 'மலர்ந்த ஜீவியம்' படித்து வருகிறேன். மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டியின் எல்லாப் புத்தகங்களும் வாங்கி படித்திருக்கிறேன். உங்களின் எழுத்துகள் எனக்குப் பலவிதங்களில் வழிகாட்டியாக இருந்திருக்கின்றன. உங்களின் படைப்புகளாகிய அத்தனைப் புத்தகங்களும் அற்புதம்! எனக்கு ஒரு பிரச்சினை இருந்தால், கண்டிப்பாக மறுமாத 'மலர்ந்த ஜீவிய'த்தில் ஏதாவது ஓர் இடத்தில் அதற்கு விடை கிடைத்திருக்கும். 'எங்கள் குடும்பம்' தொடர் எனக்குப் பல வகைகளில் தெளிவு ஏற்படுத்தியுள்ளது. ஆனால் புரிந்துகொள்வது மிகவும் சிரமம்தான். மே மாத 'மலர்ந்த ஜீவிய'த்திலுள்ள வாக்கியம் என்னை வெகுவாகச் சிந்திக்க வைத்தது. பக்கம் 28இல் "என்னால் முடியாது. என்னால் எப்படி முடியும்? என்னை உங்களிடம் ஒப்படைத்தேன். நான் செய்யவேண்டியதை எனக்காக, என் சார்பாக நீங்கள் செய்ய வேண்டும் - Agenda, Vol.5, P.101-102".

பல சந்தர்ப்பங்களில் 'நான்' என்றுதான் முன்னின்று வரும். பல சந்தர்ப்பங்களில் நான் நம்பிக்கை இழந்திருக்கின்றேன். பிரார்த்தனை கூட செய்யத் தோன்றாது. ஆனால் மேற்சொன்ன வாக்கியம் எனக்கு மிகுந்த நம்பிக்கையை ஊட்டியுள்ளது. எப்பொழுதுமே சமர்ப்பணம் என் நினைவுக்கு வரவேண்டும். நான் என்றும் அன்னையின் குழந்தையாகவே இருக்க ஆசைப்படுகிறேன். எந்தச் சூழ்நிலையிலும் நான் அன்னையை விட்டு பிரியக்கூடாதுஎன விழைகிறேன். அன்னையின் அருளும், தங்கள் நல்லாசியும் வேண்டி இக்கடிதத்தை முடிக்கின்றேன்.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**மனித நோக்கத்தை தெய்வ இலட்சியமாக மாற்றுவதே திருவுருமாற்றம்.**





# தரிசனம்

இல.சுந்தரி

The Spirit of Beauty expresses itself in these eyes. In a single glance I know the history of the person who is before me — *The Mother.*

பிரபல தொழில் நிறுவனம் ஒன்றின் சுறுசுறுப்பான இடைவேளைக்குப் பிற்பட்ட நேரம். அவரவர் தத்தம் பணியை நிறைவு செய்யக் கவனம் செலுத்தும் மாலை நான்கு மணி. இன்னும் ஒரு மணி நேரமே உள்ள நிலையில் அன்றைக்கு நிறைவு செய்ய வேண்டிய பணியை நிறைவு செய்ய அவரவர் ஆழ்ந்த கவனம் செலுத்தும்போது, மீனா இன்னும் நான்கு தினங்கள் அனுமதிக்கப்பட்ட வேலையை முன்னதாக முடிக்க ஆர்வம் காட்டினாள். ஆனால் இப்போதெல்லாம் தொடர்ந்து கம்ப்யூட்டரில் கவனம் செலுத்த முடியாதபடி உடலில் ஒரு சுமுகமின்மை ஏற்படுகிறது. கடந்த சில நாட்களாகத் திடீர்திடீரென நெஞ்சு வலி வருகிறது. இரவு நேரத்தில் வந்தால் தன் ஆதரவற்ற நிலையை எண்ணி அச்சம் உண்டாகிறது. வேலை நேரத்தில் வந்தாலோ, தன் தம்பி, தங்கைகளின் எதிர்காலம் பற்றிக் கவலை வருகிறது. இன்று காலை அலுவலகம் வரும் போதுதான் தன் நெருங்கிய தோழி அருணாவிடம் இது பற்றிக் கூறினாள். இத்தனை நாள் இது பற்றி ஏன் தன்னிடம் கூறவில்லைஎன உரிமையுடன் கடிந்துகொண்டதுடன், இன்று அலுவலகம் முடிந்தவுடன் நேரே வீட்டிற்குப் போகாமல் டாக்டரிடம் அழைத்துப் போகப்போவதாய்க் கூறியிருந்தாள். அதெல்லாம் ஒன்றும் வேண்டாம், செலவில்லாமல்

வீட்டிலேயே ஏதேனும் செய்துகொள்ளலாம் என்று கூறிவிட்டாள். ஆனால் இப்போது திடீரென்று தொடர்ந்து வலிக்கிறது. வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. வலி தாங்காமல் வேலையை நிறுத்திவிட்டு, மெல்ல எழுந்து அருணாவின் கேபினுக்குச் சென்றாள். மிகுந்த சோர்வுடன் எதையோ உள்ளடக்கிக்கொண்டு தன்னருகே வந்து நிற்கும் மீனாவைப் பார்த்த அருணா திடுக்கிட்டாள். ‘‘என்ன மீனா? ஏன் என்னவோபோல் இருக்கிறாய்? முகமெல்லாம் வியர்த்திருக்கிறது. நெஞ்சு வலியா?’’ என்று ஆதுரத்துடன் மெல்ல அவள் தோளில் கை வைத்தாள். சோகமும், வலியும் ஆதரவு காட்டுமிடத்தில் பெரிதுபடுவது இயற்கை அல்லவா? கண்கள் கலங்கி கண்ணீர் வெளிவரத் துடித்ததை அடக்கிக் கொண்டாள்.

‘‘அருணா, மிகவும் நெஞ்சு வலிக்கிறது. மேற்கொண்டு சிறிதும் ஏதும் செய்ய முடியவில்லை. எனக்கு வீட்டிற்குப் போய்விடத் தோன்றுகிறது. மானேஜரிடம் எப்படிக் கேட்பது?’’ என்றாள்.

மணி 4. இன்னும் ஒரு மணி நேரம் அலுவல் நேரம். அதனால்தான் மீனா தயங்குகிறாள்.

‘‘கவலைப்படாதே மீனா. இது விளையாட்டு விஷயமில்லை. உன் உடல்நலம் பற்றியது. நாம் உடனே மருத்துவமனைக்குப் போகவேண்டும். நீ காலையில் உன் உடல்நிலை குறித்துச் சொன்னபோதே இன்று மாலை உன்னை மருத்துவரிடம் அழைத்துப் போகவேண்டும்என்று முடிவு செய்திருந்தேன். மானேஜரும் மனிதர்தாம். அவருக்கு உன் உண்மை நிலையைச் சொன்னால் புரிந்துகொள்வார். நான் பர்மிஷன் வாங்கிவிடுவேன், புறப்படு’’ என்று கூறியவாறு தன் டேபிளின் மீது உள்ளவற்றை நினைவாக எடுத்து அதனதனிடத்தில் வைத்து, டிராயரைப் பூட்டி சாவியை எடுத்துக் கைப்பையில் போட்டுக்கொண்டாள்.

‘‘திடீரென்று டாக்டரிடம் போக நிறைய பணம் தேவைப்படுமே அருணா’’.

‘‘எல்லாம் என்னிடமிருக்கிறது. சற்று இப்படி உட்கார். நான் இப்பொழுது வந்துவிடுவேன்’’ என்று கூறிச் சென்று, கணப்போதில் பர்மிஷனுடன் வந்துவிட்டாள்.



மீனா தாய், தகப்பனை இழந்தவள். 24 வயதே ஆன இளம்பெண். இவளுக்கு 6ஆம், 7ஆம் வகுப்புகளில் பயிலும் ஒரு தம்பியும், தங்கையும் இருந்தனர். தானே தாயும், தந்தையுமாயிருந்து அவர்களைப் படிக்க வைத்து வளர்க்கிறாள். அவள் இப்பொழுது பார்க்கும் இந்த வேலை கிடைத்து ஆறே மாதங்கள் ஆகின்றன. மிகச்சிறு வயதில் தாய் இறந்தாள். சென்ற ஆண்டு தந்தையும் காலமானார். காலத்தின் கட்டாயம் அவளை வேலை பார்க்க வைத்தது. அப்பா இருந்தவரை வீட்டுப் பொறுப்பு மட்டும்தான் அவளுக்கிருந்தது. அவள் திறமையும், உழைப்பும், நேர்மையும் இந்த உயர்ந்த சம்பளத்திற்குரிய வேலை உடனே கிடைத்தது. அருணா என்றுமே அவளுக்கு உண்மையான தோழியாய் இருக்கிறாள். தன்னலுவலகத்தில் மீனாவிற்கு வேலை வாங்கித் தந்தது அவள்தான். அவள் வார்த்தையைக் காப்பாற்றக்கூடியவளாய் மீனா உழைத்தாள். மிகவிரைவில் அவளுக்கு மேன்மேலும் பொறுப்புகள் தர நிறுவனம் காத்திருந்தது. ஆனால் எதிர்பாராமல் சில தினங்களாக அவளுக்குத் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

அருணா மீனாவின் தாய், தகப்பனற்ற நிலையை நன்குணர்ந்து இருந்தாள். தங்கள் காலனியில் அருகில் அவளுக்கு வீடு பார்த்துக் கொடுத்திருக்கிறாள். குடும்பக் கவலை ஏதுமில்லாதவள். அம்மா, அப்பா, அண்ணன் மூவரின் அன்பிற்கும் உரியவள். எனவே, தன் தோழியைப் பாதுகாக்க அவளுக்கு முடிந்தது.

மீனா கூச்சசுபாவமுள்ளவள். ஏற்கனவே அருணா தனக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறாள். ஆடைகள்கூட மீனாவிற்கும் சேர்த்துத்தான் அருணா வாங்குவாள். மேன்மேலும் அவளுக்குப் பாரம் ஆகக்கூடாதுஎன எத்தனையோ கஷ்டங்களை வாய்விட்டுச் சொல்ல மாட்டாள். தன் நெஞ்சுவலி பற்றியும் கூறாது மறைத்திருந்தாள். இளம் வயது; தாய், தந்தையர் இல்லை; கவலையறிய வேண்டாத பருவத்தில் இருக்கும் தம்பி, தங்கைகள்; அவர்கள் படிப்பு, எதிர்காலம்; கடும் உழைப்பு; தன்னலமில்லாமல் அவர்கள் நலம் கருதி யாவும் செய்வது; கண்முன் எதிர்காலம் மலைப்பாகத் தோன்றி அச்சுறுத்துவது; யாவுமாய்ச் சேர்ந்து சிறிதுசிறிதாய் அவளை நலிவடையச் செய்ததன் விளைவு இந்த நெஞ்சுவலி; இதயம் பலவீனமடைந்தது.

நெஞ்சுவலி என்றதும் மணியன் நர்சிங் ஹோம் உடனே நினைவுக்கு வந்தது. இது பற்றி அருணா ஓரளவு அறிந்திருந்தாள். அதன் நிறுவனர் மணியன் அவர்களின் மனைவி கடும் இதயநோயினால் பாதிக்கப்பட்டு தக்க நேரத்தில் சரியான மருத்துவ உதவி பெற முடியாததால் இறந்து போனாராம். மனைவிமீது மிகுந்த அன்பு கொண்டிருந்த மணியன், மருத்துவ உதவி கிடைக்காமல் இறந்துபோன தன் மனைவியை எண்ணி மிகவும் வேதனைப்பட்டார். திடீரெனத் தம் தொழிலில் ஏற்பட்ட ஏற்றத்தால் பெரும்பொருள் கிடைக்கவே, யாருமில்லாத அவர், தம் மனைவியின் நினைவால் சிறந்த மருத்துவமனை ஒன்றை நிறுவி, சிறந்த இதய சிகிச்சை மருத்துவர்களைக் கொண்டு நோயுற்றவர்க்கு உதவினார். இங்கு நோய் பரிசோதனைக்குப் பணம் செலவில்லை. கன்சல்டிங் இலவசமாய்த் தரப்பட்டது. சிறப்பு வைத்தியம், அறுவைசிகிச்சை போன்றவற்றிற்கு உரிய பணம் கட்டவேண்டும். இங்கு மற்றும் ஒரு சிறப்பிருந்தது. செல்வர்கள் தம் பிறந்தநாள், மற்றும் சில விசேஷ நாட்களில் இம்மருத்துவமனைக்குப் பெருந்தொகையோ, இயன்ற தொகையோ செலுத்துவதுண்டு. எந்த நோயாளிக்கு அந்தப் பணம் பயன்படுத்தப்பட்டதோ அதற்குரிய உண்மையான செலவுக்கணக்குப் பணம் அனுப்பியவருக்குக் கொடுக்கப்படும். மீதித்தொகை இருப்பின் அது அந்த ஏழை நோயாளிக்கே வழங்கப்பட்டுவிடும். இம்மருத்துவமனை-யில் இலஞ்சம், ஊழல் இல்லை. சிலரே சம்பளத்திற்கு வேலை செய்பவர்கள். பெரும்பாலும் இங்குத் தொண்டாகப் பணி செய்பவர்கள் அதிகம். பணக்காரர்கள் பணம் செலவிட்டு இங்கு நல்ல முறையில் சிகிச்சை பெறுகின்றனர். மிகஇயலாதவர்கள் யார் உதவியுடனாவது சிகிச்சை பெறுவர். எவ்வாறெனினும் முறையான, அக்கறையான மருத்துவ உதவி செய்யும் சிறந்த மருத்துவமனையாய்த் திகழ்ந்தது. எனவே, அருணா மீனாவை அங்கு அழைத்துச் சென்றாள்.

மீனாவுக்கு அம்மருத்துவமனை பற்றி ஒன்றும் தெரியாது. பெரிய அளவிலும், மிகத்தூய்மையாகவும் காணப்பட்ட அம்மருத்துவமனையைக் கண்டவுடன் மீனா தனக்கு என்னவாக இருக்கும், எவ்வளவு செலவு பிடிக்கும், தன்னிலைக்கு இந்த உயர்ந்த மருத்துவமனை சரிவருமா? என்றெல்லாம் கவலை உண்டாயிற்று.



சிறப்பு மருத்துவர் ஒருவர் மீனாவைப் பரிசோதித்தார். ஸ்கேன் செய்ய ஏற்பாடு செய்தார். ஸ்கேன் முடிந்து வெளியே வந்ததும், அவர்களைத் தன்னறையில் உட்காரச் செய்துவிட்டு, அவசரப் பணியாக அவசரச் சிகிச்சைப் பிரிவிற்குச் சென்றுவிட்டு சில நிமிடங்களில் வந்தார்.

வந்தவுடன் அருணா, மீனா என்ற அந்த இரண்டு பெண்களுடன் பேசத் தயாரானார். ஆனால் விரைவாக ஏதும் சொல்லாது, அவளுக்குத் தற்போதுள்ள உடல் தொந்தரவுகள் என்னென்ன என்று கேட்டு அறிந்தார். அவள் என்ன படித்திருக்கிறாள்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்? ஏன் அவள் பெற்றோர் உடன்வரவில்லை? என்பது போன்ற கேள்விகளை ஒரு நண்பரைப்போல் பரிவுடன் விசாரித்தார். அவளுக்குப் பெற்றோர் இல்லை என்று அறிந்தவுடனேயே, அவசரப்பட்டு அவளிடம் கூறக்கூடாதுஎன எச்சரிக்கையானார்.

அருணாதான் முதலில் பேசினாள். "என்ன ரிசல்ட் வந்திருக்கிறது டாக்டர்? என் தோழியின் இதயம் நலமாகத்தானேயிருக்கிறது?" என்று பதற்றத்துடன் கேட்டாள்.

"ஆமாம், ஆமாம். இதயம் நலமாகத்தானிருக்கிறது. ஒரு சிறு அறுவை சிகிச்சை செய்வது நல்லது" என்று இயல்பாகச் சொல்ல முயன்றார்.

மீனா நுண்ணறிவு கொண்டவள். டாக்டர் உடனே ஏதும் சொல்லா-மல், இத்தனை பேச்சுக் கொடுத்து தாமதமாக வெளியிடும்போதே ஏதோ இருக்க வேண்டும் என்று தோன்றியது. செலவு பற்றி வேறு கவலையாக இருந்தது.

"அச்சப்படும்படி ஏதேனும் இருக்கிறதா டாக்டர்?" என்றாள் மீனா.

'சிறு பெண். பெற்றோரும் இல்லாதவள். பாவம், இவளிடம் எப்படிச் சொல்வது? இவளுக்கு விரைவில் அறுவைசிகிச்சை செய்யாவிட்டால் உயிருக்கே ஆபத்து நேரும் நிலையில் இருக்கிறாள். அதிர்ச்சியும் கூடாது' என்று மிகவும் உணர்ந்த டாக்டர், "இல்லையம்மா, அப்படியெல்லாம் அச்சப்படும்படி ஒன்றுமில்லை. இந்தக் காலத்தில் எத்தனை வசதி வாய்ப்புகளிருக்கின்றன. நீ படித்த பெண். சிறிது தொடங்கும்போதே நோயைக் கிள்ளியெறிவது புத்திசாலித்தனமல்லவா? அதனால்தான் உடனே அறுவைசிகிச்சை செய்வது நல்லது என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

“செலவு அதிகம் ஆகுமா டாக்டர்?” என்று கவலையுடன் கேட்டாள் மீனா.

“ஓரளவு செலவாகும்தான். ஆனால் உடனே நலமாகிவிடுவாய்” என்றார்.

மேலும் சில விபரங்கள் கூறவேண்டும். அருணாவிடம் மட்டும் கூறுவது நல்லது என்று எண்ணிய டாக்டர், “சரி, எதுவாக இருப்பினும் இப்போது சாப்பிட மாத்திரை எழுதித் தருகிறேன். அருணா, உங்கள் தோழியை வெளியே உட்காரவைத்துவிட்டு இந்த மாத்திரைகளை இங்குள்ள எங்கள் மருந்தகத்திலேயே வாங்கி வாருங்கள். மாத்திரையை என்னிடம் காட்டியபிறகு உங்கள் தோழிக்குக் கொடுக்கலாம் என்பதால் வாங்கி, என்னிடம் எடுத்துவாருங்கள். எப்படிச் சாப்பிடவேண்டும் என்பதைச் சொல்கிறேன். உங்கள் தோழி சற்றுச் சோர்வாக இருப்பதால், அலைச்சல் வேண்டாம் என்பதால் அவர்களை உட்காரவைத்துவிட்டு நீங்களே வாங்கிவரலாம்என நினைக்கிறேன்” என்றார்.

எப்படியும் மீனாவிற்கு மிகவும் வலியும், சோர்வுமிருந்தது. சிறிது வெளியே போய் உட்காரவே விரும்பினாள்.

“நீ போய் மருந்து வாங்கி, டாக்டரிடம் காட்டிவிட்டு, எப்படிச் சாப்பிட வேண்டும் என்ற முறைகளை அறிந்து வா. நான் வெளியே உட்கார்ந்து இருக்கிறேன்” என்று வெளியே நீண்ட குஷன் பெஞ்சில் போய் சாய்வாக அமர்ந்தாள்.

மீனாவுக்குத் தெரியாமல், அவள் உடல்நிலையில் உள்ள கடுமையை அருணாவிடம் கூறி, அறுவைசிகிச்சை உடனடியாகச் செய்ய வேண்டியதைக் கூறவே மீனாவை உட்காரவைத்துவிட்டு மாத்திரையை வாங்கி வந்து தன்னிடம் காட்டும்படி டாக்டர் கூறினார்.

அருணா அங்கேயே உள்ள மருந்தகத்தில் அங்குள்ள டாக்டரின் பிரிஸ்கிரிப்ஷனுக்கு மட்டும் பணம் பெறாமல் கொடுக்கப்படும் மாத்திரையைப் பெற்றுக்கொண்டு, மீனாவைப் பரிசோதித்து மாத்திரை எழுதித் தந்த டாக்டர் பிரகாஷ் என்பவரின் அறைக்கு வந்தாள்.

“வாருங்கள் அருணா. எங்கள் மருந்தகத்தில் நாங்கள் எழுதித் தரும் மாத்திரைகளைப் பிழையின்றி எடுத்துத் தருவார்கள். எங்கள் (இந்த மருத்துவமனையில் பணியாற்றும் டாக்டர்கள்) மருந்து சீட்டுகளுக்குப் பணமும் பெறமாட்டார்கள். ஆனால் உங்களை இங்கு



வரச் சொன்னது உங்கள் தோழியின் உடல்நிலை பற்றி அவர்களுக்குத் தெரியாமல் உங்களிடம் சொல்வதற்காகவே. அவர்கள் இப்போதுள்ள நிலையில் அதிர்ச்சி, கவலை எதுவும் கூடாது. அத்துடன் மிகவிரைவில் இன்றோ, நாளையோகூட இங்குச் சேர்த்துவிடுவது நல்லது. ஒரே வாரத்தில் பேஷண்டை தயார் செய்து அறுவைசிகிச்சை செய்துவிடுவோம். அதன்பிறகு கவலையில்லை” என்றார்.

“என்ன செலவாகும் டாக்டர்?” என்றாள் அருணா.

“ஒரு இலட்சம்கூட ஆகலாம். ஆனால் இங்கு வீண்செலவு எதுவும் கிடையாது” என்றார்.

அவள் பெற்றோர் இல்லாத பெண். வேறு சொத்து என்று எதுவும் கிடையாது. அவளுக்குச் சிறிய தம்பி, தங்கைகள் படிக்கும் பருவத்தினர். என்னால் இயன்ற அளவு செலவு செய்வேன். என் சேமிப்பெல்லாம் சேர்த்தாலும் 20, 30 ஆயிரங்களைத் தாண்டாது” என்று உருக்கமாகச் சொன்னாள்.

“இங்கு உதவி பெற ஒரு வழியுண்டு. இன்று ஏதேனும் நன்கொடை வந்தால், அதை உங்கள் தோழியின் செலவுக்கு நான் சிபாரிசு செய்கிறேன். இதை உங்கள் தோழியிடம் சொல்ல வேண்டாம். ஏதேனும் காரணம் சொல்லி, சற்று அவர்களைச் சமாளித்து வெளியே காத்து இருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாகக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். ஏதேனும் வழி பிறக்கும். இன்று தாமதமானாலும், நாளையும் ஒரு முறை வந்து பாருங்கள்” என்றார் டாக்டர்.

‘சரி’ என்ற கூறி, வெளியே மீனாவை நோக்கி வந்தாள். மீனா கையில் ஒரு சிறிய படம் போன்ற ஒன்றை வைத்து, ஆடாமல் அசையாமல் அதில் ஆழ்ந்திருந்தாள். அருகில் வந்த அருணா, “என்ன மீனா, நான் வந்ததுகூடத் தெரியாமல், அப்படி ஆடாமல், அசையாமல் எதை நோக்கித் தவம் செய்கிறாய்?” என்று கேட்டாள்.

“இதைப் பாரேன்” என்று மிகுந்த ஆர்வத்துடன் ஒரு சிறிய லேமினேட் செய்யப்பட்ட அட்டையை அவளிடம் நீட்டினாள்.

‘அப்படி இவள் ஆழ்ந்து பார்க்கும்படி அதில் என்னதானிருக்கும்’ என்று கை நீட்டி வாங்கி, அதை ஆவலுடன் பார்த்தாள். அதில் இரண்டு கண்களின் படம் இருந்தது. ஒளி வீசும் கண்கள் என்று யார் பார்த்தாலும் தெரியும்.

‘‘யாருடைய கண்கள் இவை? கண்கள் மட்டும் உள்ள ஒரு புகைப்படத்தை இப்பொழுதுதான் முதன்முதலில் பார்க்கிறேன்’’ என்றாள் அருணா.

“யாருடைய கண்கள் என்பது எனக்கும் தெரியவில்லை. நான் இங்கு வந்து உட்கார்ந்தவுடன் இந்தப் பெஞ்சில் இந்தப் படமிருந்தது. அக்கம்பக்கத்தில் யாரையும் காணவில்லை. யாரோ கைதவறி இதை இங்கு விட்டுச் சென்றிருக்க வேண்டும். இது என்னவாக இருக்கும் என்று எடுத்துப் பார்த்தேன். கண்கள் படம். இதைப் பார்த்தவுடன் எனக்கு ஏதேதோ தோன்றியது. இந்தக் கண்கள் என்னை ஊடுருவிப் பார்ப்பதுபோல், இவை என்னிடம் ஏதோ சொல்வதுபோல்கூடத் தோன்றுகிறது. உனக்கு ஏதும் தோன்றுகிறதா?’’ என்றாள்.

“எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் இதன் பின்பக்கம் பார்த்தாயா? ஏதோ எழுதப்பட்டிருக்கிறது” என்றாள் அருணா.

உடனே ஆர்வமாக அதை வாங்கிப் பார்த்தாள் மீனா. அதில் “The Spirit of beauty expresses itself in these eyes. In a single glance I know the history of the person who is before me” என்று சிறியதாக அச்சிடப்பட்டு இருந்தது. இருவரும் வியப்புடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

‘‘மீனா, இதை நாம் கடவுளின் கண்கள் என்றே எண்ணிக் கொள்வோம். நீ இதைப் பார்த்து இத்தனை உணர்ந்திருக்கிறாய். நிச்சயம் உன் நிலை இறைவனுக்குப் புரிந்து, உனக்குப் பதில் தருவதாய்க் கொள்வோம். கவலைப்படாதே. இந்த மாத்திரையைச் சாப்பிடு. இதை இப்போதும், இரவிலுமாகச் சாப்பிடவேண்டும்” என்றாள்.

“நான் டாக்டரைப் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன். நீ இந்தக் கண்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிரு’’ என்று அன்புடன் அவள் முதுகை வருடிக்கொடுத்துச் சொன்னாள். தன்னிடம் அருணா காட்டும் பரிவையும், அக்கறையையும் கண்டு மீனா நெகிழ்ந்துபோனாள்.

‘‘வாருங்கள் மிஸ் அருணா. உங்கள் தோழியின் தேவை இறைவனுக்குத் தெரிந்தேயிருக்கிறது” என்றார். (சற்றுமுன் மீனாவிடம் புகைப்படத்திலுள்ள கண்களைப் பார்த்துத் தான் கூறியதற்கும், டாக்டர் தன்னிடம் இப்போது கூறுவதற்கும் எவ்வளவு ஒற்றுமை என்று உள்ளூர உணர்ச்சிவயப்பட்டாள்).



“என்ன சொல்கிறீர்கள் டாக்டர்?” என்றாள் அருணா.

“நீங்கள் அப்பால் சென்றவுடன் இங்கு அலுவலகத்திலிருந்து எனக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். அதில் உங்கள் தோழியின் பெயரைக் குறிப்பிட்டு, அவருக்குத் தேவையான உதவியைச் செய்யத் தாம் மிகவும் கடமைபட்டுள்ளதாயும், தாம் மிகஅவசரமாய் வெளிநாடு சென்றுகொண்டு இருப்பதாயும், அவர் திரும்பி வரும்போது மீனாவின் உடல்நலம் குறித்த நல்ல செய்தியைக் கேட்க விரும்புவதாயும், தாம் உதவுவது மீனாவுக்குத் தெரியவேண்டாம் எனவும் குறிப்பிட்டிருந்தது” என்றார்.

“உதவி செய்பவர் பெயரை நான் அறியலாமா டாக்டர்?” என்றாள்.

“இல்லை அருணா. உதவி செய்தவர் தம் பெயரைக் கூறவேண்டாம் என்பதை நான் மீறமுடியாது. மீனாவிற்கு அறுவைசிகிச்சை முடிந்து விரைவில் நலமாகிவிடுவாள். அப்போது மீனாவின்மூலமே நீங்கள் அதை அறியக் கூடும். இப்போதைக்கு வேண்டாம்” என்றார் டாக்டர்.

“சரி டாக்டர். நாங்கள் எப்போது வைத்தியத்திற்கு வரவேண்டும்? இங்குள்ள முறைகள் என்ன?” என்றாள்.

“இதோ, இந்தப் படிவத்தை நிறைவு செய்து இன்றே கொடுத்து விடுங்கள். நாளையே உங்கள் தோழியை இங்குச் சேர்த்துவிடுவது நல்லது” என்று ஒரு படிவத்தை அவளிடம் கொடுத்தார்.

“மீனா, நீ நாளையே இங்குச் சேர்ந்துவிடலாம். இந்தப் படிவத்தை நிறைவு செய்து கொடுத்துவிட்டுப் போவோம். விரைவில் நீ நலமடைந்து பழையபடி ஆகிவிடுவாய் என்று டாக்டர் சொல்லிவிட்டார்’’ என்று உற்சாகமாய்க் கூறினாள்.

“சிறுகுழந்தைபோல் பேசுகிறாய் அருணா. ஓரளவு நிறையப் பணம் செலவாகும்என்று டாக்டர் சொல்லவில்லையா? அவ்வளவு பணத்திற்கு நாம் என்ன செய்ய முடியும்?” என்றாள் மீனா.

‘‘அந்தக் கவலை உனக்கேன்? டாக்டரே எல்லாம் பார்த்துக் கொள்வதாய்ச் சொன்னார்’’ என்றாள்.

“டாக்டர் வைத்தியம்தான் செய்வார். பணம்கூட அவரே செலவு செய்வாரா?” என்றாள்.

“ஓ, அதுவா? இங்கு நமக்குப் பல வசதிகள் உண்டு. இங்குள்ள டாக்டரின் பிரிஸ்கிரிப்ஷனுக்கு பணம் வாங்காமல்தான் மாத்திரை

கொடுத்தார்கள். டாக்டர் பிரகாஷ் உன்னைப் பற்றி அறிந்ததும் உன்னை தம் மகளாய்ப் பாவித்து உதவிகள் செய்கிறார்'' என்றாள் அருணா.

“சரி, வேலையை விட்டுவிட்டு மாதக்கணக்கில் இங்கிருந்தால் தம்பி, தங்கைகளின் படிப்பு மற்றும் தேவைக்கு எங்குப் போவது? நீ ஏற்கனவே என் பாரங்களைச் சுமக்கிறாய். இனியும் நான் உன்மீது சுமை வைக்க விரும்பவில்லை'' என்றாள் மீனா.

“பெரிய மனுஷிபோல் ஒன்றும் பேசாதே. ஒன்றரை மாதத்தில் நீ வேலைக்கே போகலாம்'' என்றாள் அருணா.

“ஒன்றரை மாத லீவு என்ற சலுகை, வேலையில் சேர்ந்து ஆறே மாதங்களாகும் எனக்குப் பொருந்துமா?'' என்றாள் மீனா.

“இந்த வேலை போனால் இன்னொன்று. நீ நாளைய கவலையை விடு. பொறுப்புகளை முழுவதும் இறைவனிடம் விட்டுவிடுவோம். நீ வீட்டிற்கு வரும்வரை உன் தம்பியும், தங்கையும் எங்களுடன் இருப்பார்கள். நாங்கள் உன் அன்பர்கள்தாம்'' என்றாள் அருணா.

“யாவும் சரி என்றாலும், உன் பெற்றோரிடம் பேசி முடிவெடுக்க வேண்டாமா? பெரியவர்கள் இருக்கும்போது நாமே முடிவெடுப்பது சரி இல்லை'' என்றாள் மீனா.

“இப்பொழுது படிவம் நிறைவு செய்து கொடுத்துவிட்டுப் போவோம். வீட்டில் பெரியவர்களிடம் சொல்வோம். இவ்வளவு முக்கியமான ஒன்றை அவர்கள் ஒருபோதும் மறுக்கமாட்டார்கள்'' என்றாள் அருணா.

கையில் வைத்திருந்த கண்களைத் தற்செயலாக மீண்டும் பார்க்க நேர்ந்தது. “In a single glance, I know the history of the person who is before me'' என்ற தொடர் நெஞ்சைத் தொட்டது. ‘இந்த விழிகள் யாருடையன? இறைவனுடைய பார்வையோ இது? இதன்முன் நிற்கும் என் நிலையையும் இக்கண்கள் அறியுமோ?’ என்ற போக்கில் எண்ணம் எழுந்தது.

“என்ன யோசிக்கிறாய் மீனா?'' என்றாள் அருணா.

“இறைவனுக்கு என் நிலைமை தெரியும்என்று முன்பு சொன்னாய் அல்லவா? அதை நினைத்தேன்'' என்றாள் மீனா.

ஒருவாறு நாளை காலைவர முடிவு செய்து, படிவத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்துவிட்டுத் திரும்பினர்.

நினைவாக அந்தக் கண்களைத் தன்னுடன் மீனா எடுத்துக் கொண்டாள்.



வீட்டிற்குத் திரும்பியதும், அருணாவின் பெற்றோருடன் இவள் தம்பி, தங்கைகள் இவளைக் காணாது காத்திருந்தனர். அவர்களைப் பார்த்தவுடன் மீண்டும் கலங்கினாள்.

அருணா தன் வீட்டினர்க்கு மீனாவின் நிலைமையைத் தெளிவு படுத்தினாள். அவர்கள் அன்புடன் மீனாவிற்குத் தைரியமூட்டினர்.

அன்றிரவு முழுவதும் மீனா சரியாக உறங்கவில்லை. அந்தக் கண்களைப் பார்ப்பதும், அதிலுள்ள வாசகங்களையும் எண்ணி இருந்தாள். ‘இது யாருடைய கண்கள்? இது ஏன் இப்பொழுது தன் கையில் கிடைத்திருக்கிறது’ என்று எண்ணத் தோன்றியது. தற்செயலாகக் கிடைத்த அந்தக் கண்களில் அவளுக்கு ஏதோவொரு நம்பிக்கை எழுந்தது. அதைத் தன்னுடையதாக எண்ணித் தன்னுடனேயே வைத்துக் கொள்ளத் தோன்றியது. ‘In a single glance I know the history’ இந்தத் தொடருக்கும் தனக்கும் தொடர்பு உள்ளதாக நம்பினாள்.

மறுநாள் காலை அருணாவின் பெற்றோரும் உடன் வந்து மீனாவை மருத்துவமனையில் சேர்த்தனர். உடனே அவள் அடுத்த வாரமே அறுவை சிகிச்சைக்குத் தயாராகும்படி மருந்துகள் கொடுத்துக் கவனிக்கப் பட்டாள். டாக்டர் பிரகாஷ் மீனாவின் பொறுமை, கடமையுணர்வு, தணிந்த இயல்பு, இவற்றுடன் பெற்றோரில்லாத இவள் நிலை யாவும் கண்டு அவள்பால் மிகுந்த கருணையுடையவரானார். உண்மையாகவே அவளைத் தம் மகள்போல் பாவித்து மருத்துவம் மேற்கொள்வதைக் கண்டு, உடனிருந்த மருத்துவர்களும், பணிப்பெண்களும் அவளுக்குத் தனிக்கவனம் செலுத்தினர்.

‘தானிருந்த நிலையென்ன? தனக்கு நடக்கும் மரியாதைகளென்ன? இது எப்படிச் சாத்தியமாயிற்று?’ என்று வியந்தாள் மீனா. ஒரே வாரத்தில் அறுவைசிகிச்சை நலமாய் முடிந்து, அவளும் உடல்நிலை தேறலானாள். ஒரு மாதம் அங்கேயே வைத்திருந்து மருந்து, சத்துணவு சரியான முறைகளுடன் அனுசரிக்கப்பட்டது. நாள் தவறாது அருணாவின் இல்லத்தவர்களுடன் அவள் தம்பி, தங்கை இருவரும் அழைத்து வரப்பட்டனர். தன் அக்காவிற்கு ஏதோ நேர்ந்துவிட்டதுஎன அஞ்சியிருந்த சிறுவர்கள் அவள் தேறியிருப்பது கண்டு மகிழ்ந்தனர். அனைவரின் பரிவும், மகிழ்வும் அவளுக்கு இதமளித்தது.

அவள் புதிய மீனாவாக உருவானாள். பழைய கவலைகள், மலைப்பான சிந்தனைகள் யாவும் கரைந்துபோயின. உடல்நலமாக உணர்ந்தாள். அடிக்கடி வரும் நெஞ்சுவலி அறவே நீங்கியது. எதிர்காலம் ஒளிமயமாய்த் தோன்றியது. தன்னால் நல்ல முறையில் உழைக்க முடியும், தம்பி, தங்கைகளைப் படிக்கவைக்க முடியும்என்று தோன்றியது. இவை எல்லாம் எப்படிச் சாத்தியமாயிற்று? தானிருந்த நிலையில் இந்தப் பெரிய வைத்திய உதவியைப் பெற்றிருக்க முடியுமா?

டாக்டர் பிரகாஷ் தன்னை அவர் மகள்போல் பாவித்து இரவு, பகல் பாராமல் பாடுபட்டது, அவர்மீது மரியாதை கொண்ட மருத்துவமனை ஊழியர்கள் தன்னைத் தம் தொழில்கடந்த நிலையில் கவனித்துக் கொண்டது, தனக்கு விலையுயர்ந்த மருந்துகள் தருவிக்கப்பட்டது, யாவுமே கனவா, நனவாஎன்று எண்ணும்படியிருந்தது.

தன் தலையணைக்கடியில் எப்போதும் அந்தக் கண் படத்தை வைத்திருந்தாள். அடிக்கடி அதை எடுத்துப் பார்த்துக்கொள்வாள். கண்கள் பேசும் என்று கேட்டும், படித்தும் இருக்கிறாள். யார் கண்களுடனும் அவள் பேசியதில்லை. முதன்முதலாக அவள் இந்தக் கண்களுடன்தான் பேசியிருக்கிறாள். இது எவருடைய கண்? இது ஏன் எனக்குக் கிடைத்தது?

கடும்நெஞ்சுவலியுடன் தான் மருத்துவமனையில் நுழைந்தது, மருத்துவச் செலவு பற்றி மலைத்தது, இந்தக் கண்கள் படம் கிடைத்ததும் அதன் பின்னுள்ள வார்த்தைகளை அருணா சுட்டியது, உடனே டாக்டர் தன் பொறுப்பில் மருத்துவச்செலவு மற்றும் யாவற்றையும் ஏற்றது என்பவற்றை எண்ணிப் பார்க்கிறாள். அந்தக் கண்களைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

சப்தமிடாது உள்ளே வந்த டாக்டர் பிரகாஷ், அவள் கையில் எதையோ வைத்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்துவிட்டு, அதில் தான் குறுக்கிடக்கூடாதுஎன்ற நாகரிகவுணர்வுடன் திரும்ப எத்தனித்-தார். மீனா அப்போது அவரைக் கவனித்துவிட்டதால், ''வாருங்கள் டாக்டர்'' என்றாள். கையிலிருந்ததை மறைக்கவில்லை, பதற்றப்படவில்லை என்பதையும் அவர் கவனிக்கத் தவறவில்லை.

''என்ன மீனா? எப்படியிருக்கிறாய்? எதை அப்படி ஆழ்ந்து பார்க்கிறாய்'' என்றார்.



''ஆமாம் டாக்டர். இதை உங்களிடம் காட்டவேண்டும் என்றுதான் நினைத்தேன். பாருங்கள். இதைப் பார்த்து உங்களுக்கு என்ன தோன்றுகிறதுஎன்று சொல்லுங்கள்'' என்று அந்தக் கண் படத்தை அவரிடம் கொடுத்தாள்.

யாருடைய புகைப்படமாகவோயிருக்கும் என்று அதை வாங்கிய டாக்டர் அது கண்கள் படம் என்பதைப் பார்த்து வியந்தார். பிறகு சற்று உற்றுப் பார்த்தார்.

''இந்தக் கண்களில் அபரிமிதமான ஒளி தெரிகிறது. உன்னை எனக்குத் தெரியும். என்னை உனக்குத் தெரிகிறதா என்று கேட்பதைப் போலிருக்கிறது. சற்று ஆழ்ந்து பார்த்தால் நம்முள்ளே நுழைவதுபோல் இருக்கிறது. அன்பு, ஆதரவு, யாவுமே தெரிகிறது. நிச்சயம் இது உன் அம்மாவின் கண்களாகத்தானிருக்கும் என்று நினைக்கிறேன். இந்தப் பார்வையில் தெரியும் பரிவு ஒரு தாயினுடையது. ஆனால் இப்படிக் கண்களை மட்டும் புகைப்படம் எடுத்து வைத்துக்கொள்பவர்களை நான் அறிந்ததில்லை. யாருமே முகம் முழுவதையுமே படம் எடுத்து வைத்துக் கொள்வார்கள். இது எப்படிக் கண்கள் மட்டும் புகைப்படம் எடுத்தீர்கள்?'' என்றார்.

அவர் பேசும்வரை அமைதியாகக் குறுக்கிடாமல் இருந்துவிட்டு, லேசாகப் புன்முறுவல் செய்தாள்.

"என்ன சிரிக்கிறாய்? நான் சொல்வது சரியா, தவறா?" என்றார்.

"நீங்கள் கூறியதில் பாதி சரி, பாதி தவறு" என்றாள்.

"என்ன சொல்கிறாய் நீ!" என்று வியப்புடன் கேட்டார்.

"ஆமாம் டாக்டர். அந்தக் கண்களில் தெரியும் பரிவு ஒரு தாய்க்கு உரியது என்பது சரி. அந்தக் கண்கள் என் அம்மாவின் கண்கள் என்பது தவறு. நான் இங்கு மருத்துவப் பரிசோதனைக்கு வந்தபோது பெரும்வேதனையுடன் வந்தேன். என் உடல்நிலையைப் பரிசோதித்து நீங்கள், அறுவைசிகிச்சைக்கு ஓரளவு செலவாகும் என்றதும், மேலும் உடனடியாகச் செய்யவேண்டும் என்றதும் நிலைகுலைந்துபோனேன். என்னை வெளியே காத்திருக்கச் சொன்னபோது, நான் அமர்ந்த பெஞ்சில் என்னருகே இந்தக் கண் படம் இருந்தது. ஏதோவொரு ஆர்வத்தில் எடுத்துப் பார்த்தேன். என்னென்னவோ தோன்றியது. அப்போதைய என் உடல்நிலை, பெருஞ்செலவு, யாவற்றையும் மறந்து,

இந்தக் கண்களை இரசிக்க ஆரம்பித்தேன். அது தரிசனம் என்று இப்போது தோன்றுகிறது. அப்போது உங்களிடம் பேசிவிட்டு வந்த அருணா, 'நாளையே வைத்தியம் தொடங்கவேண்டும். டாக்டரே யாவும் கவனித்துக்கொள்வதாய்ச் சொல்லியிருக்கிறார்' என்றாள். இந்தக் கண்களைத் தரிசித்த பிறகுதான் அந்தச் செய்தி கிடைத்தது. அது மட்டுமல்லாமல் அதன்பின் எழுதப்பட்டுள்ள வாசகத்தைப் பாருங்கள். அது என் நெஞ்சைத் தொட்டது. எனவே, இதை நான் பற்றிக் கொண்டேன்'' என்று சொல்லும்போதே உணர்ச்சிவயப்பட்டாள்.

''எல்லாம் இறைவன் செயலே. இப்போது உன் உடல்நிலை நன்கு தேறிவிட்டது. நீயும் அதை உணர்கிறாயா?'' என்றார் பரிவுடன்.

''ஆமாம் டாக்டர். அதை நானும் உணர்கிறேன். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. மீண்டும் நான் வேலையில் சேரவேண்டும். என் தம்பி, தங்கையின் எதிர்காலத்திற்கு நான் உழைக்கவேண்டும். என்னை இந்த நிலைக்கு உருவாக்கிய தங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை'' என்றாள்.

''உண்மையில் நீ எனக்கு நன்றி சொல்வதற்கு முன்பாக இந்த மருத்துவத்தை உனக்களிக்க ஏற்பாடு செய்த உங்கள் குடும்ப நண்பருக்குத்தான் நன்றி சொல்லவேண்டும்'' என்றார்.

''யார்? அருணாவின் அப்பாவிற்கா? அருணாதானே நீங்களே செலவுப் பொறுப்புகளை ஏற்பதாகவும், இங்கு மாத்திரைகூட இலவசமாக அவள் பெற்று வந்ததாகவும் கூறினாளே'' என்றாள் மீனா.

''இல்லையில்லை. அருணா வீட்டினரைச் சொல்லவில்லை. அப்போதைய நிலையில் நான் ஏற்பதாகச் சொல்லவேண்டியிருந்தது. உன் உடல்நிலையைச் சோதித்து, உனக்குப் பெருந்தொகை செலவாகும் என நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு நபரிடமிருந்து ஈமெயில் வந்தது. அதாவது உனக்கு உதவத் தாம் கடமைப்பட்டிருப்பதாகவும், சொன்னால் நீ மறுத்துவிடுவாய் என்றும் அவர் தெரிவித்திருந்தார். அத்துடன் அப்போது அவர் U.S. சென்றுகொண்டிருப்பதால் விரைவில் நேரில் வந்து உன்னைப் பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார். அப்போது அவர் தம் பெயரைக் கூறவேண்டாம் என்றதால் கூறவில்லை. அருணாவிடமும் கூறவில்லை. இப்போது நீ நன்கு தேறியுள்ளதால் நன்றிக்குரியவரைக் கூற முன்வந்தேன்'' என்றார் டாக்டர்.



''அப்படியா! வியப்பாக உள்ளது. எனக்கு அவர் கடமைப்பட என்ன இருக்கிறது? அவர் பெயரையாவது கூறுங்கள் டாக்டர்'' என்றாள்.

''அவர் பெயர் வைத்யநாதன் என்றிருந்தது'' என்றார் டாக்டர்.

''இந்தப் பெயரில் இந்த அளவிற்கு எனக்கு யாரையும் தெரியாது'' என்றாள் மீனா.

''அவர் உன் அப்பாவின் நெருங்கிய நண்பர் என்று எழுதியிருந்தார்''.

''இல்லை டாக்டர். ஏதோ மாறுபாடு நிகழ்ந்திருக்கிறது. என் அப்பாவிற்கு நெருங்கிய நண்பர்கள் கிடையாது. குறிப்பாக இந்தப் பெயரில் இல்லவேயில்லை. சொல்லப்போனால் என் அப்பா யாருடனும் நன்றாகப் பழகக்கூடியவரே இல்லை'' என்றாள் மீனா.

''இன்னும் சில தினங்களில் அவரே வந்துவிடப் போகிறார். உன்னைப் பார்க்க மிகவும் ஆவலுடன் இருப்பதாயும் தெரிவித்திருக்கிறார். நேரில் பார்த்தால் உனக்கே தெரியும்'' என்றார்.

*அடுத்த இதழில் முடியும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆபத்தைச் சமர்ப்பணம் செய்வது சிரமம்.

ஆசையைச் சமர்ப்பணம் செய்யத் தோன்றுவதில்லை.

மனத்தளவிலாவது செயலளவிலாவது ஆசையை அனுபவிக்-கவே மனிதன் விழைகிறான்.

ஆசையைச் சமர்ப்பணம் செய்வது சிரமமானாலும் அவசியம்.

✡ ***ஆபத்தைச் சமர்ப்பணம் செய்ய முடியாது.***

✡ ***ஆசையைச் சமர்ப்பணம் செய்யத் தோன்றுவதில்லை.***

## P.66 Driven by his own formidable Power,

**தன் சொந்த பயங்கரமான சக்தியால் நடத்தப்பட்டு,**

- அசுர ஆட்டத்தில் தன் கூட்டாளியுடன்
- தன் விதியின் தலைவனாக அவள் ஆணையை ஏற்றான்.
- தன் சுக, துக்கங்களுக்கு அவள் இஷ்டத்தைச் சட்டமாக்கினான்.
- அவள் அரசாணைக்குத் தன்னைப் பணயமாக்கினான்.
- அவள் தரும் தண்டனைக்கோ, வரத்திற்கோ அவன் தயாரானான்.
- வலியென புலன்கள் உணர்த்துபவையும்,
- அவள் ஸ்பர்சத்தின் இனிமையை உணர்ந்தான்.
- அனுபவம் அவள் ஆனந்தத் தீண்டல்.
- அவள் பாதம் அவன் மார்பில் பதிந்தது.
- அவள் வருகையின் ஆனந்தம் அவனுக்கு ஆச்சரியம்.
- எந்தச் செயலிலும் எந்த க்ஷணத்தின் சந்தர்ப்பத்திலும்
- அவள் செய்கை அவன் பார்வைக்கு அற்புதம்.
- அவளில் அவன் பூரிக்கிறான். ஆனந்தமெனும் அவள் கடலில் நீந்துகிறான்.
- உலகின் லீலை அவளது. அவன் பயிலும் ஆனந்தம் அளவற்றது.
- அவள் எண்ணம், அவள் செயல் அவனுக்கு ஆனந்த ஊற்று.
- அவள் விருப்பம், அவன் ஆணை.
- அவள் பிரியம் அவனுக்கிட்ட கட்டளை.
- ஆத்மா, ஏகனான அநேகன்.
- காலத்தைக் கடந்த அவன் பேற்றையும் கைவிட்டு வந்தான்.
- முடிவற்ற காலத்தில் முடிவில்லாத பிறப்பு அவன்.
- அவள் சிறியதின் பரப்பு அனந்தத்தின் இடம்.



- சத்புருஷன் நாமே.
- நம் சக்தியுடன் கண்ணாமூச்சு விளையாடுகிறோம்.
- இயற்கையின் கருவி இறைவனின் ஆட்டம்.
- உள்ளுறை ஆத்மா சொந்த வீடென உறையும்.
- பிரபஞ்சம் அவன் பொழுது புரளப் பயன்படும் பரப்பு.
- பரந்த விளையாட்டரங்கம் அவன் வலிமையின் பாசறை.
- அனைத்தும் அறிந்தவன் நம் இருளை ஏற்கிறான்.
- மனிதனாகவும், விலங்காகவும் வந்த தெய்வம்.
- காலத்தை வென்றவன் காலத்திற்கும், விதிக்கும் பணிகிறான்.
- அழியாதவன் அழிவோடு ஆடச் சம்மதிக்கிறான்.
- ஞானத்தின் உறைவிடம் அஞ்ஞானத்துள் வந்தது.
- ஆனந்த சாகரம் ஜடத்தோடு வாழ்கிறது.
- சச்சரவும், வலியுமான உலகில் பிறப்பெடுத்தான்.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரார்த்தனை பலிப்பதை நாம் கண்டாலும், பலிக்கும் வகையை நாம் அறியோம். சூழலில் உள்ளதும், நம் மனதிலுள்ளதும் ஒன்றேயாகும். நம் மனதிலுள்ளது சூழலில் ஓர் இழையாகும்.

நம்முள் உள்ளதை மனத்திற்குரியது, உணர்வுக்குரியது, உடலுக்குரியது எனப் பிரிக்கலாம். இவற்றுள் மனத்திற்கு உரியதற்கே வலிமை குறைவு. உணர்வுக்குரியதற்கு வலிமை அதிகம். உடலுக்குரியதற்கே அதிகபட்ச வலிமையுண்டு.

உடலிலுள்ள ஆன்மீகத் (will) திறனை வெளிக்கொணர்ந்து செயலாற்ற முனைவதே இந்த யோகத்தின் இலட்சியம்.

***உடலின் ஆன்மீகத் திறன் செயல்படும் யோகம்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**879) எதுவும் முடியாத பொழுது நம்பிக்கையை நாடுகிறோம். எல்லாம் முடியும் என்றபொழுது நம்பிக்கையை நாடும் ஆன்மா உயர்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. அத்துடன் அன்னையின் உறவை அனுபவிக்கிறது. இனி வரும் எச்செயலும் அன்னையிடம் நெருங்கி வரும் சந்தர்ப்பமாக அறிகிறது.**

**எதுவும் முடியாத பொழுது செய்வனவற்றை எல்லாம் முடியும் பொழுது செய்ய வேண்டும்**.**

*எதுவும் முடியாத பொழுது அழைத்த அன்னையை எல்லாம் முடியும்பொழுது அழைப்பது அன்னையை நெருங்குவதாகும்.*
*முடிந்தபொழுது அழைக்கும் அழைப்பு சமர்ப்பணம்.*

- ✡ முடியாததை முடியுமாறு செய்வது திறமை.
- ✡ திறமை பலிப்பது பயிற்சியால்.
- ✡ பயிற்சியின் உயர்வை நிர்ணயிப்பது அறிவு.
- ✡ அறிவின் தரம் நம்பிக்கையால் நிர்ணயிக்கப்படும்.
- ✡ முடியாததை திறமையால், பயிற்சியால், அனுபவத்தால், அறிவால் முடியும்படிச் செய்வதைவிட நம்பிக்கையால் செய்து முடிப்பது ஆன்மீக முறை.
- ✡ *நம்பிக்கை என்பது ஆன்மாவின் அறிவு என்கிறார் பகவான்.*
- ✡ ஆன்மா பெற்றதன் பிரதிபலிப்பு மனத்தில் காண்பது நம்பிக்கை எனவும் கூறலாம்.
- ✡ அதையே மனத்தில் அறிவு எழுமுன் செய்து முடிக்கும் திறமை எனக் கூறலாம்.



- ✡ *ஆன்மாவின் அறிவு மனத்தின் நம்பிக்கையானால், அதே நம்பிக்கை மனத்தில் தெளிவான அறிவாவது ஆன்மீக முன்னேற்றம்.* அதைச் செய்து முடிப்பது மேற்சொன்ன** உபாயம்.
- ✡ "எனக்கு எடுத்து விளக்க முடியாது. செய்யத் தெரியும். செய்தால் பலிக்கும்" என நம்பிக்கையுடையவர் கூறுகிறார். அதற்குப்பதிலாக "எனக்கு எடுத்து விளக்க முடியும், செய்யத் தெரியும், செய்தால் பலிக்கும். எப்படிப் பலித்தது என விளக்க முடியும்" என்பது நம்பிக்கை அறிவாக மலர்வது.
- ✡ இந்த மாறுதல் மனதில் ஏற்பட மேற்சொன்ன உபாயம் பயன்படும்.
- ✡ இந்த உபாயமில்லாமல் தானே இம்மாறுதல்வர என்ன செய்ய வேண்டும், அது எப்படி நடக்கிறது? ஆத்மாவில் ஏற்பட்ட ஜோதி மனத்தில் இறங்கி வந்து ஞானமாகி, அறிவாக மலர்வதை நாம் சில சமயங்களில் கண்டிருக்கிறோம். மேடையில் பேசும்பொழுது ஓர் உற்சாகம் வந்து (inspiration) தன்னையறியாமல் சொற்கள் சரமாரியாகப் பொழிந்து கைதட்டல் ஆரவாரமாகிறது. கொஞ்ச நாட்கள் கழித்து இந்த உற்சாகம் inspiration தெளிவான எண்ணமாக மனதில் உதிப்பதை நாம் கண்டிருக்கலாம். மேடையில் பேசுபவருக்கு வரும் உற்சாகம், நண்பருடன் பேசுபவருக்கும் வரும். உற்சாகம் என்பது ஆன்மீக சக்தி. எண்ணம் என்பது மனத்தின் தெளிவு. ஆன்மீக சக்தி மனத்தின் தெளிவாகச் சிந்தனை உதவும். மௌனம் பெரிதும் உதவும்.
- ✡ அறிவில் தெளிவுள்ளவர் சிந்தனையையும், ஆன்மாவில் பக்குவமுள்ளவர் மௌனத்தையும், அந்தச் சிறப்புகளற்றவர் மேற்கூறிய உபாயத்தையும் மேற்கொள்ளலாம்.
- ✡ நம்மால் முடிந்தால் செய்கிறோம்.
- ✡ முடியாவிட்டால் முயல்கிறோம்.
- ✡ முடியும்பொழுது செய்வது தன் நம்பிக்கை.
- ✡ திறமையிருந்தால் பிறரை நம்ப முடியாது.
- ✡ திறமையை நம்புவது இயற்கை.
- ✡ திறமை தன்னை வெளிப்படுத்தவே செயலை ஆரம்பிக்கும்.

- ✡ திறமைக்கு ஜீவனுண்டு.
- ✡ அகந்தைக்கும் ஜீவனுண்டு.
- ✡ திறமை அகந்தையை வலுப்படுத்தும்.
- ✡ முடியாதபொழுது அன்னையை அழைக்கிறோம்.
- ✡ அழைப்பால் சற்று முடியும் போலிருந்தால், அன்னையை மறந்து திறமையை நம்புகிறோம்.
- ✡ முடியாதபொழுது அழைப்பது இயல்பு, இயற்கை.
- ✡ நம்மால் முடியும்பொழுது அன்னை நினைவு வாராது.
- ✡ எந்த நினைவும் வாராது.
- ✡ முடியும்பொழுது அன்னையை அழைப்பவருக்கு இடைவிடாத அன்னை நினைவிருக்கும்.
- ✡ முடிந்தபொழுது அன்னையை அழைத்தால் அன்னை வேண்டும் எனப் பொருள்.
- ✡ செயலைவிட அன்னை முக்கியம் என்பவரால் மட்டும் செய்யக் கூடியது அது.
- ✡ அன்பருக்கு அன்னையின்றி செயல்பட முடியாத நிலை அது.
- ✡ அன்னைமூலம் செய்யாத செயல் தேவையில்லைஎன்ற மனநிலை அது.
- ✡ அன்னைக்காக வாழ்பவர் அவர்.
- ✡ நாம் நமக்காக வாழ்கிறோம்.
- ✡ செயலைப் பூர்த்தி செய்ய விரும்புகிறோம்.
- ✡ இந்த அன்பர் செயல்மூலம் அன்னையைத் தன்னில் பூர்த்தி செய்ய விரும்புபவர்.
- ✡ மனிதப் பிறவியை அன்னையை அடைவதற்காக எடுத்தவர் அவர்.
- ✡ அது பிரார்த்தனையில்லை.
- ✡ சமர்ப்பணமுமில்லை.
- ✡ இரண்டறக் கலப்பதாகும்.

❀❀❀



**880) செயலைச் சமர்ப்பணம் செய்வதைவிட அதன் விவரங்களைச் சமர்ப்பணம் செய்வது கடினம். இதற்கு நம்பிக்கை விவரமாக இருக்க வேண்டும்.**

*சமர்ப்பணம் விவரமானால் கடினமாகும்.*

- ✡ படிக்காத தகப்பனார் பையன் காலேஜில் படிக்க அனுமதித்தால் பணம் தருவார். அதற்குமேல் அவரால் பையன் படிப்பைப் புரிந்து கொள்ள முடியாது.
- ✡ படித்த தகப்பனாருக்குப் பையன் படிப்பின் விவரங்களெல்லாம் தெரியும். அவற்றுள் பங்கு கொள்வது அவ்வளவு சுலபமன்று. விவரமான சமர்ப்பணம் அது போன்றது.
- ✡ வட்டிக் கடைக்காரன் கம்பனிக்குக் கடன் கொடுப்பதும், பாங்க் கடன் தருவதும் இதுபோன்றது. வட்டி கொடுத்துவிட்டால் கடைக்காரன் எதுவும் கேட்க மாட்டான். பாங்க் பிராஜக்ட் ரிப்போர்ட்டிலிருந்து ஸ்டாக் ஸ்டேட்மெண்ட்வரை அனைத்தையும் கேட்கும். வந்து பார்வையிடும்.
- ✡ விவரமான சமர்ப்பணம் செய்ய, விவரம் தெரிய வேண்டும்.
- ✡ பயணம், டிக்கட் வாங்குவது, இன்டர்வியூக்குப் போவது, பதில் சொல்வது ஆகியவற்றை விவரமாகச் சமர்ப்பணம் செய்ய சமர்ப்பணம் எப்படி வேறுபடுகிறதுஎனத் தெரிவது அவசியம். டிக்கட் வாங்க வரிசையில் நிற்பதைச் சமர்ப்பணம் செய்ய நிற்க பொறுமையிருக்காது என்பதை சமர்ப்பணம் செய்ய வேண்டும். இன்டர்வியூவைச் சமர்ப்பணம் செய்ய டென்ஷனைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும். நமக்குத் தெரிந்த பதிலைச் சொல்லும் ஆசையைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும். சமர்ப்பணம் எவ்வளவு விவரமாக இருக்கிறதோ அந்த அளவுக்குப் பலன் உண்டு.
- ✡ அட்மிஷனுக்குப் போகும் பையன் பொதுவாகச் சமர்ப்பணம் செய்தால் அட்மிஷன் கிடைக்கும். விவரமாகச் சமர்ப்பணம் செய்தால் அதன் பலன் பிறகு தெரியும். ஹாஸ்டலில் நல்ல ரூம் கிடைக்கும்பொழுது, செக்ரடரியாகத் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது, ஸ்காலர்ஷிப் கிடைக்கும்

**பொழுது, பேச்சுப் போட்டியில் பரிசு பெறும்பொழுது, அன்று இன்டர்வியூவில் செய்த சமர்ப்பணத்தின் சுவடுகள் தெரியும்.**

✡ **விவரமான சமர்ப்பணம் முழுமையான சமர்ப்பணம்.**

✡ **ஒரு காரியத்தைச் சமர்ப்பணம் செய்யும்பொழுது, அதன் எதிர்கால வரலாறு முழுவதையும் சமர்ப்பணம் செய்யலாம். எதிர்காலப் பலன் அதை அறிவிக்கும்.**

✡ **சமர்ப்பணம் விவரமாக இருப்பதுபோல் தீவிரமாக இருக்க முடியும்.**

✡ **விவரமும், தீவிரமும் கடந்து நெகிழ்ந்த சமர்ப்பணம் உண்டு.**

✡ **ஒரு செயலில் உலகம் அடங்கும் என்பதால் ஒரு செயலின் சமர்ப்பணத்தில் நம் அத்தனைக் குணங்களும், அம்சங்களும் அடங்கும்.**

✡ **சமர்ப்பணமான வாழ்வைவிடப் பெரிய சந்தோஷமில்லை என்று அன்னை கூறியதின் பொருள் இதில் தெரியும்.**

*தொடரும்.....*

❀❀❀

## ஜீவிய மணி

**அறிவும், உணர்வும் கலந்து அமிர்தமாகும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு விஷயம் புரிந்தால் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை; துரோகம் செய்தவரை நினைப்பதில்லை எனில் அனுபவத்தால் ஆன்மா விழிப்படைகிறது.

***புரிந்தபின் சிந்தனையில்லை.***

***துரோகத்தை மறப்பது ஆன்ம விழிப்பு.***





## Mind is no independent and original entity.

**மனம் தனியாக செயல்படக்கூடியக் கருவியில்லை.**

✡ **மனத்திற்கு முன்னுள்ள நிலைகள் 3.**

✡ **சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிவதால் மனம் ஏற்படுகிறது.**
**எனவே சத்தியஜீவியம் மனத்தின் பிறப்பிடம்.**

✡ **சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தின் புறம்.**
**எனவே சத்தியஜீவியம் சச்சிதானந்தத்தில் உற்பத்தியாகிறது.**

✡ **சச்சிதானந்தம் பிரம்மத்தில் உற்பத்தியாகிறது.**
**மனம் தனியாகச் செயல்பட முடியாது. ஏனெனில் அதற்குச் சொந்தமான திறனில்லை.**

*உதாரணம்:*

✡ *நாம் காண்பது சர்க்கார் அல்லது நாம் வேலை செய்யும் ஆபீஸ்.*
*இந்த ஆபீஸ் சர்க்காரின் பகுதி. சர்க்கார் என்பது இலாக்கா.*
*இந்த இலாக்கா சர்க்காரின் பகுதி.*
*சர்க்கார் சட்டசபையின் பகுதி.*
*அதனால் சர்க்காரோ, இலாக்காவோ, நாம் வேலை செய்யும் ஆபீஸோ தனித்துச் செயல்பட முடியாது.*

✡ *கண் பார்க்கிறது. பார்வை கண்ணுடையது. பார்ப்பது மூளை. கண் கருவி. கண் தனியாகச் செயல்பட முடியாது.*

✡ *பாங்க் ஏராளமான பணம் வைத்துள்ளது.*
*பணம் பொதுமக்களுடையது. பாங்க் பணத்தின் மூலமன்று; இருப்பிடம்.*

✡ *மூளை மனத்தின் கருவி.*

*மனம் ஆத்மாவின் கருவி.*

*மூளை தானே தனித்து இயங்க முடியாது.*

✡ *கடையில் விற்கும் பொருள்கள் கடையில் உற்பத்தியாகவில்லை.*

*பாக்டரியில் உற்பத்தியாகிறது.*

*கடை கருவி.*

*கடை தனித்து இயங்க முடியாது.*

✡ *மனம் மேலிருந்து சச்சிதானந்தத்திலிருந்து எழுகிறது.*

*கீழிருந்து ஜடத்திலிருந்து பரிணாமத்தால் எழுகிறது.*

*எப்படிப் பார்த்தாலும் தனித்து இயங்கும் திறனுடையது மனமில்லை.*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

யோகத்தை மேற்கொண்டபின் ஒரு பழக்கம், ஒரு பண்பு, ஒரு மனிதரைக் கைவிட நேர்ந்தால் அதற்குச் சில சட்டம், முறை, கட்டுப்பாடுகள் ஆகியவற்றைப் பின்பற்றுகிறோம். வேறு சில பழக்கம், பண்புகள், மனிதர்களை இன்று ஏற்றுக்கொள்ள அதே சட்டம், முறை, கட்டுப்பாடுகளை அனுசரிப்பதில்லை. ஏற்கனவே தாம் விரும்பி ஏற்றுக்கொண்டவற்றிற்கும் (மனிதர், பண்பு, பழக்கம்) அவற்றை (சட்டம், முறை, கட்டுப்பாடு) பின்பற்றுவதில்லை.

***ஏற்பதற்கு நாடாத சட்டத்தை விடுவதற்கு நாடுகிறோம்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# வரம் பெறுவது எப்படி?

விரதம், நோன்பு, உடலை வறுத்துவது, துதி, தவம் ஆகியவை ஆண்டவனின் வரத்தை நமக்குப் பெற்றுத் தரும். அது மோட்சம் தரும்.

✡ **நாம் நாடும் மோட்சம் பூலோகச் சுவர்க்கம்.**

✡ **நம் குடும்ப வாழ்வில் அபரிமிதம், செல்வாக்கு, பெருகிவரும் பணம், தொடர்ந்து உயரும் அந்தஸ்து, நிம்மதியான மனம், நிரந்தரமான பாதுகாப்பு security நாம் தேடும் மோட்சம்.**

✡ **நாம் தலைக்கு $500 ஆண்டு வருமானம் (மாதம் ரூ.2000/-) பெறுகிறோம். அமெரிக்கர் வெறும்கையுடன் அந்நாட்டை அடைந்தவர் $30,000 (மாதம் ரூ.120,000) பெறுகின்றனர். அவர்கள் உழைப்பாலும், அறிவாலும் அதைப் பெற்றனர்.**

✡ **அதே உழைப்புடனும், அறிவுடனும் நமக்கு அன்னையின் அருளும் உண்டு.**

✡ **நாம் பலன் பெற குடும்பத்தையும், சர்க்காரையும் எதிர்பார்க்கிறோம்.**

✡ **அமெரிக்கர் தங்கள் பங்குக்குள்ள முயற்சியை நம்மைப்போல் 40 மடங்கு எடுத்ததால் அவர்களால் குடும்பத்திற்கும், சர்க்காருக்கும், உலகத்திற்கும் தர முடிகிறது.**

**நம் பங்கு முயற்சியைத்**
**தைரியமாக அளவுகடந்து எடுப்பது**
**வரம் பெறும் தகுதி.**

❀❀❀

# உரிமை நம்முடையது

1978இல் அமெரிக்க வியாபாரி இந்திய வியாபாரிக்கு முழு பாக்கியையும் செக்மூலம் (telexஇல்) அனுப்பினார். இருவரும் நேரடியாகச் சந்தித்துப் பேசியபொழுது இந்திய வியாபாரி 8 இலட்சம் பாக்கி என்றார். அமெரிக்கர் 4 இலட்சம் என்றார். பேசி முடிவு செய்ததில் 4 இலட்சம் கொடுத்து கணக்கை முடிவு செய்யத் தீர்மானம் செய்தனர். அமெரிக்காவிலிருந்து அதன்படி 4 இலட்சம் பணம் அனுப்பி, எந்தக் கணக்கிற்குப் பணத்தைக் கட்டுவதுஎன instructionஐ telexமூலம் அனுப்பினார். பணம் வந்தவுடன் இந்திய வியாபாரி தான் பேசியதற்கு மாறாக 4 இலட்சத்தைப் பழைய கணக்கிற்கு நேர் செய்துகொண்டு மேலும் 4 இலட்சம் கேட்டார். கேஸ் கோர்ட்டிற்குப் போயிற்று. பாங்க் வக்கீலும் இந்திய வியாபாரி வக்கீலும் ஒருவரே. பாங்க் இந்திய வியாபாரிக்குச் சாதகமாக telex instruction வரவில்லைஎன கோர்ட்டில் பொய் சொல்லிற்று.

✡ **மூன்று வருஷம் கேஸ் நடந்தது. பொய் தன்னை நிலைநிறுத்தியது.**

நாம் பாங்கை மதிக்கிறோம். பணம் நம்முடையது. பாங்க்குடையதன்று. பணத்தைக் கொடுத்துவிட்டோம். என்ன செய்வதுஎன மலைப்பாக இருக்கிறது. பணம் நம்முடையது. உரிமை நம்முடையதுஎன நாம் மறந்துபோகிறோம். அமெரிக்க வியாபாரி அதைப் புரிந்து கொண்டவுடன், தம் பணத்தைத் திருப்பித் தரும்படி பாங்க்கைக் கேட்டார். அடுத்த நாள் இந்திய பாங்க் கோர்ட்டில் உண்மையை ஒத்துக்கொண்டது.

மகன் போட்டியில் பங்குகொள்கிறான், பரிசு பெறுகிறான். பரிசுடன் பணம் பெறுகிறான். பரிசு அன்னை கொடுத்தது. பணம் அன்னையுடையது. நாம் நம் உரிமையை பாங்க் விஷயத்தில் மறப்பதுபோல் பரிசும், பணமும் அன்னைக்குரியதுஎன மறந்துவிடுகிறோம். சிறுவனுடைய எதிர்காலம் ஒளிமயமாக இருக்க பரிசுக்குரிய நன்றியை அன்னைக்குச் செலுத்த வேண்டும். பரிசுத்தொகை காணிக்கையாக வேண்டும்.

✡ **பாங்க் விஷயத்தில் உரிமை நம்முடையது எனவும்,**

✡ **பரிசு விஷயத்தில் அருள் அன்னையுடையது எனவும்,**

**நாம் மறந்துவிடுகிறோம்.**

❀❀❀